பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

A/L 91
விலங்கியல்:
திரு. ஈசன்
திரு. ஞானம்
திங்கள்-வெள்ளி 4.30 மணி
தூய பிரயோக } கணிதம்
திரு. கிருஷ்ணு
சனி-ஞாயிறு 8.30 - 10.30 மணி
நிரு ரியூசன் சென்ரர்,
கோண்டாவில்.

# உதயன்

விலை ரூ2/50

A/L 91
பௌதிகவியல்:
திரு. சௌந்தி
செவ் - வியா - 1.00 மணி
இரசாயனவியல்:
திரு. செல்வா
செவ் - வியா - 2.00 மணி
தாவரவியல்:
திரு. பாலா
சனி - ஞாயிறு 4.30 மணி
நிரு ரியூசன் சென்ரர்,
கோண்டாவில்.

ஊடர்: 4 சுக்கில ஞூ வைகாசி மீ 17 உ செவ்வாய்க்கிழமை 24 ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை (30 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-148

## பட்டதாரி மாணவருக்கும் மதிய உணவுப் பணம் கிடைக்கும்

கொழும்பு, மே 30

பாடசாலை மாணவருக்கு மதிய உணவுக்காக நாள் ஒன்றுக்கு மூன்று ரூபா வழங்கும் திட்டம், பட்டதாரி மாணவருக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இது சம்பந்தமாக பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் விடுத்த யோசனை ஒன்றை உயர்கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் சாகுல் ஹமீது ஏற்றுக்கொண்டார்.

காலை உணவுக்கு பட்டதாரி மாணவர் தினமும் 5 ரூபா முதல் 6 ரூபா வரை செலவு செய்யப்படுவதாகவும் உபவேந்தர்கள் சுட்டிக்காட்டினர்.

மூன்று ரூபா திட்டத்தை பட்டதாரி மாணவருக்கும் விஸ்தரிப்பதன் மூலம் அரசுக்கு ஆண்டு தோறும் 4 கோடி 10 லட்சம் ரூபா செலவீனம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-எ)

# மதுறு ஓயாத் திட்டத்தில் தமிழருக்கு 75 வீதம் இடம்

## இலங்கை அரசிடம் கனடா வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 30

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒன்றுன மதுறு ஓயாத் திட்டத்தில், எழுபத்தைந்து சதவீதம் தமிழ் மக்களைக் குடியேற்ற வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது,

மதுறு ஓயாத் திட்டத்திற்கு கனேடிய அரசாங்கமே நிதி உதவி செய்கிறது. அந்த வகையில் மாவட்டத்தில் பெரும்பான்மையினராக உள்ள தமிழர்களுக்கு குடியேற்றத்தில் அதிக பங்கு வழங்கப்பட வேண்டும் என்று கனேடிய அரசாங்கம் இலங்கை அரசை, வற்புறுத்தி உள்ளதாம்.

இந்தத் தகவலை கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த கனேடியத் தூதுவர் கரோலின் மஸ்கி தெரிவித்தார்.

கனடா வழங்கும் உதவிகளை தமிழ்ப் பகுதிகளுக்கு நேரடியாக வழங்கமுடியாதா என்று கேட்கப்பட்டபோதே அவர் இந்த விவரத்தை வெளியிட்டார்.

தமிழ்ப் பகுதிகளுக்கு என்று தனியாக நேரடியாக நிதி உதவி செய்வது கஷ்டம். ஆயினும் நாம் இயன்றவரை தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு உதவி வருகிறோம்; உதவுவோம் என்று அவர் மேலும் சொன்னுர்.

மதுறு ஓயாத் திட்டத்தில் மக்கள் குடியேற்றத்துக்கென ஐந்தரைக்கோடி கனேடிய டாலர்களை கனடா வழங்கவுள்ளது. இதனுல் கிழக்கு மாகாணத் தமிழ்மக்கள் பயன் பெறுவார்கள். இக் குடியேற்றத்தில் 75 சத வீதம் தமிழ் மக்களைக் குடியேற்றவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் வற்புறுத்தப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வண்ணுர்பண்ணை தபாலதிபர் கொலை

யாழ்ப்பாணம், மே 30

ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வண்ணுர்பண்ணை தபாலக அதிபரான முருகேசு குற்றுலசிங்கம் (வயது 37) என்பவரே கொலையுண்டவர் ஆவார்.

சனிக்கிழமை இரவு இவரது வீட்டிற்குச் சென்ற ஆயுதபாணிகள் சிலர் இவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர் என்றும் பின்னர் நேற்றுக் காலையில் இவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என்றும் தெரிய வருகிறது.

## இணுவிலில் வான் விபத்தில் சிறுமி பலி!

யாழ்ப்பாணம், மே 30

நேற்று நண்பகலளவில் இணுவில் பகுதியில் இடம்பெற்ற மினிவான் விபத்து ஒன்றில் சிறுமி ஒருவர் பலி

(8ஆம் பக்கம் பார்க்க)

## முத்திரை இல்லை

யாழ்ப்பாணம், மே 30

யாழ் பிரதம தபாற்கந்தோரில் முத்திரைகள் எதுவும் விற்பனைக்கு இல்லை எனத் தெரிய வருகிறது.

## தென்பகுதியில் 48மணிநேர இராணுவ முற்றுகை!

கொழும்பு, மே 30

தென்பகுதியில் நான்கு கிராமங்கள் 48 மணித்தியாலய இராணுவ முற்றுகைக்கு உள்ளாகின.

வெலிகம, தலால, கந்தற, டிக்வெல ஆகிய கிராமங்களை ஒரே சமயத்தில் சுமார் ஆயிரம் இலங்கைப் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இத் தேடுதல் நேற்று (திங்கள்) முடிவடைவதாக இருந்தது.

மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன மாத்தறைக்கு நேற்று முன்தினம் விமானம் மூலம் சென்றுர். அதன் பின்னரே தேடுதல் ஆரம்பமானது. (ஓ-எ)

## நகரில் பெண் சுட்டுக்கொலை

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்-டேவிட் வீதி, வீடொன்றில் வைத்து பெண்ணுெருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் இரு பிள்ளைகளின் தாயான திருமதி இந்திராணி கிறிஸ்தோப்பர் (இந்திரா) வயது 30 என்று அடையாளம் காணப்பட்டது.

## இராணுவத்தில் சேர்வதற்கு தமிழ் இளைஞர் பின் நிற்பு

### தளபதி ஹமில்டன் கவலை

கொழும்பு, மே 30

இலங்கை இராணுவத்தில் சேரும்படி வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு அவ்வளவு பலன் கிடைக்கவில்லை.

இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா இவ்வாறு கவலை தெரிவித்திருக்கிறுர்.

இது சம்பந்தமான விளம்பரங்களை மீண்டும் தமிழ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப் போவதாகவும் தளபதி வனசிங்கா சொன்னுர். (அ-எ)

## இன்றுஹர்த்தால் அனுஷ்டிக்க ஈ.என்.டி.எல்.எவ் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 30

வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி உறுப்பினருமான திரு. எஸ். சிவபாலராஜாவை விடுதலை செய்யக்கோரி இன்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை யாழ்

[8ஆம் பக்கம் பார்க்க]

## ரயில் சேவையை காங்கேசன்வரை விஸ்தரிக்க முயற்சி!

யாழ்ப்பாணம், மே 30

ரயில் சேவையை காங்கேசன்துறை வரை விஸ்தரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன் ஏற்பாடாக யாழ்ப்பாணம் முதல் காங்கேசன்துறைவரையான சேதமடைந்துள்ள ரயில் பாதைகள் இப்போது திருத்தப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக நேற்று யாழ் ரயில் நிலையத்திற்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சேதமடைந்த ரயில்வேக் கடவை பகுதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து காங்கேசன் துறைவரை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சுமார் 2 மாதங்களில் இந்த திருத்த வேலைகள் பூர்த்தி அடைந்ததும் ரயில்சேவை காங்கேசன் துறைவரை விஸ்தரிக்கப்படும் என்றும் அறிய வருகிறது. (ஓ-9)

## போக்குவரத்துத் தடை

யாழ்ப்பாணம், மே 30

நேற்று யாழ் நகரின் பருத்தித்துறை வீதியில் உள்ள ஆரியகுளம் சந்திக்கும் - விக்ரோறியா வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டது.

ரயில்வேப் பாதையில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலை காரணமாகவே இந்த பாதை போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது.

இந்தத் தடை காரணமாக வாகனங்கள் அனைத்தும் ஆரியகுளம் சந்தியில் திரும்பி ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, மின்சார நிலையவீதி வழியாக பஸ் நிலையத்தை அடைந்தன. (ஓ-9)

## நவீன சந்தையில் இயங்கிய ஆயுர்வேத மூலிகை கிளையை மீளத் திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் நவீன சந்தையில் இயங்கி மூடப்பட்ட ஆயுர்வேத மூலிகைகள் கூட்டுத்தாபனத்தை மீளத் திறக்கும்படி கோரப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆயுள்வேத வைத்தியர்கள் தமக்குத் தேவையான ஆயுர்வேத மூலிகைகளை குறைந்த விலையிலும் தரமானதாகவும் வாங்குவதற்கு வசதியாக யாழ் நகரில் ஆயுள்வேத மூலிகைகள் கூட்டுத்தாபனக் கிளை இயங்கி வந்தது.

அக்கிளை மூடப்பட்டு பல காலமாகியும் திறக்கப்படவில்லை. இதை உடனடியாகத் திறக்க உதவும்படி ஆயுர்வேத வைத்தியர்கள் அரசைக் கோரியுள்ளனர். (ஓ-3)

## முச்சந்தி முரளி



வருந்தி அழைத்தாலும் வாராது வாரா என்று ஔவையார் பாடியதை ஹமில்டனுக்கு எடுத்துச் சொன்னுல் நல்லது என்டு நினைக்கிறன்...!

## அமைச்சர் ரஞ்சன், அமிர் குழு சம்மாந்துறைக்கு விஜயம்

கொழும்பு, மே 30

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறைக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

அமைச்சருடன் உள்நாட்டலுவல்கள், மாகாணசபை அமைச்சர் யு.பி. விஜேக்கூன், புனர்வாழ்வு துணை அமைச்சர் வின்சன்ட் பெரேரா, ஐ.தே.க. எம்.பி.க்களான ஏ. எச். எம். அஸ்வர், அப்துல்காதர், கூட்டணி எம்' பி.க்கள் அ. அமிர்தலிங்கம், எஸ். திவ்வியநாதன், சுதந்திரக்கட்சி எம். பி. ஹலிம் இஷாக், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஆகியோரும் சென்றிருந்தனர்.

கொழும்புக்கு ஞாயிறு அன்றே திரும்பிய அமைச்சர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பாதுகாப்பை தொண்டர் படை உறுதி செய்ய வேண்டும்

### திருமலையில் முதலமைச்சர் உரை

திருகோணமலை, மே 30

"வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் பாதுகாப்பை தொண்டர் படையினர் உறுதி செய்ய வேண்டும்"

வடக்கு - கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் மேற்கண்டவாறு கூறினுர்.

திருமலை ஏகாம்பரம் விளையாட்டரங்கில் நேற்று இடம் பெற்ற குடிமக்கள் தொண்டர் படையினரின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டு முதலமைச்சர் உரை நிகழ்த்தினுர்.

165 குடிமக்கள் தொண்டர் படையின் பயிற்சி பெற்று வெளியேறிய இவ்வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது :-

நீங்கள் பெரும் கஷ்டமான சூழ்நிலையில் இப்பொறுப்பை

(8ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரம் பேர் முன்னிலையில் ஈரானில் 11 பேருக்கு தூக்கு!

பஹ்ரைன், மே 30

போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டதற்காக ஈரானில் 11 பேர் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை வடமேற்கு நகரான ரப்ரிஸில் இவர்கள் தூக்கிலிடப்பட்டதை பல்லாயிரக்கணக்கானோர் பார்த்தனர்.

போதைவஸ்து பாவனை மற்றும் கடத்தல் சட்டம் கொண்டு வரப்பட்டபின்னர் கடந்த ஜனவரி முதல் ஈரானில் மொத்தம் 579 பேர் தூக்கிலிடப்பட்டனர். (ஓ-எ)

## பஸ் விபத்து நால்வர் பலி

கடந்த சனிக்கிழமை இரவு நாவலப்பிட்டி தொலஸ்பாகே வீதியில் அரசு பஸ் ஒன்று 300 அடி பள்ளத்தில் விழுந்து நொருங்கியது.

அப்போது 4 பேர் உயிரிழந்தனர். 12 பேர் படுகாயமடைந்தனர். (ஓ-எ)

### சுபநேரம்

30 — 05 — 1989
வைகாசி — 17
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10. 22 முதல் 11.52 வரை
ராகுகாலம்:
02.52 முதல் 04.22 வரை

## துப்புரவு செய்ய வெடிக்க வைக்கப்பட்டன

ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் நகரப் பகுதியில் கேட்ட சத்தங்கள் யாழ் நூலகத்தில் ஏற்கனவே சிதைந்த சுவர்களை உடைத்துத் துப்புரவு செய்வதற்காக வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகளின் சத்தம் என்று ஊர்ஜிதமாகி உள்ளது.

வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகள் அங்கு கண்டு எடுக்கப்பட்டவைகள் அல்ல என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். ஆஸ்பத்திரியில் ஏமாற்றுப் பேர்வழிகள்! கவனம்!!

யாழ்ப்பாணம், மே 30

யாழ். போதனு வைத்தியசாலையில் ஏமாற்றுப் பேர்வழிகளின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.

நேற்றுக்காலை மோசடிச் சம்பவம் ஒன்று ஆஸ்பத்திரிக்குள் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:—

காரைநகரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் யாழ். போதனு வைத்தியசாலைக்கு தனது உறவினரைப் பார்வையிட வந்திருந்தார்.

அப்போது அவரிடம் வந்த ஒருவர், தாம் அவருக்கு மிகவும் தெரிந்தவர் என்றும். பல திருமண வீடுகள், மரண வீடுகளில் கண்டு பழக்கமானவர் என்றும் கூறினுர்.

அதன் பின்னர் தமது மனைவி யாழ் வைத்தியசாலையின் 12 ஆம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கிறுர் என்றும் அவருக்கு அவசரமாக பால் மா வாங்கவேண்டும் என்றும் கூறிய அவர், தம்மிடம் ஆயிரம் ரூபா நோட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கரணவாய்ப் பகுதியில் அதிகாலை முதல் தேடுதல்

கரவெட்டி, மே 30

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை கரணவாய்ப் பகுதி அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

காலை 6 மணிக்கு அண்ணு சிலையடிப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. சேத விவரம் எதுவும் தெரிய வரவில்லை.

நெல்லியடி - யாழ்ப்பாணம் போக்குவரத்துக்கள் கொடிகாமம் ஊடாக இடம்பெற்றது. பகல் 11 மணியளவில் போக்குவரத்து சீரடைந்தது.

நாவலர் மடத்தடியில் அதிகாலை 5 மணி முதல் மாணவர்கள், பொலீஸ் உத்தியோகத்தர், மற்றும் அரசாங்க உத்தியோகத்தர், பத்திரிகையாளர் உட்பட பல தரப்பினரும் தடுத்து வைக்கப்பட்டனர்.

காலை 10 மணியளவில் யாக்கரு அமைதிப்படை அதிகாரி தடுத்து வைத்ததற்கு வருத்

(8-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

அலுமாரிகள் Hall Settyகள் சாப்பாட்டு மேசைகள் Meat Safe தையல் மெஷின் (சிங்கர்) புத்தக விழுக்கி Oven Fridge, றேசிங் சயிக்கிள், Type writer Electrical Goods வீட்டுப் பாவனைக்குரிய பொருட்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்: 112, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (11097)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் கசெட் றேடியோ, T. V Fan, Cot Bicycle மற்றும் பல விற்பனைக்குண்டு. Sup'ka 343, பருத்தித்துறைறேட், அரசடி, நல்லூர். (11094)

## NEW CITY TRADERS

Daytron T. V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas cooker, Hotplate, Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர்: ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள் களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [சி/2505]

## SRI RAM

பாவித்த செற்றி, T.V Oven, Fridge, Tea set, Dinner set, மண்ணெண்ணைக் குக்கர் மற்றும் புதிய தளபாடங்கள் மலிவு விலையில்: Sri Ram 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி [11093]

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் 30. 05. 89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [570]

## Wanted

With theatre and Maternity training starting Salary Rs. 1700/- Per month. Central Nursing Home, Thirunelvely. [11095]

## தவறிவிட்டது

701601947 V சுந்தரமூர்த்தி தேவதாஸ் என்பவரின் அடையாள அட்டையும் கார்பாசும் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11092)

சண்முகராஜா குணேந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை (622872668 V) 26.05.1989 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11083)

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ் மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்காக உள்ளது. தொடர்பு: Ratna Motors 55, Stanley Road, Jaffna. [591]

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17 மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

## புலமைப் பரிசில் பரீட்சை

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி (சணிதம், தமிழ்) யாழ்நகரில் உள்ள பிரபல புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். வெளியீடு: புதியகல்வி நிலையம். விலை ரூபா 14/50. மாதிரிப் பரீட்சை 3-6-89 சனி பி.ப 3.00மணி. தமிழ்/ கணிதம் நடைபெறும். [701]

## ஆங்கில வகுப்புக்கள்

O/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும் ஏனைய வகுப்புக்களுக்கும் விசேட ஆங்கில வகுப்புக்கள் 3.6.1989 இல் ஆரம்பமாகின்றன. ஆசிரியர்: K. மூர்த்தி, தொடர்பு: நாகேந்திரம், 34/4, செட்டித்தெரு, நல்லூர். (588)


# கடந்த கால சம்பவங்களினால் பாதிப்புற்றோருக்கு உளவளப் பயிற்சி

## தொண்டர்களை நியமிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 30

யாழ் மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம் பெற்ற சம்பவங்களால் பாதிக்கப் பட்ட இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரை அவர்களின் மனத்தாக்கத்தில் இருந்து விடுவிக்க உளவள பயிற்சி அளிக்க கிராமந்தோறும் தொண்டர்களை நியமிக்க சுகாதார ஆலோசனைக்கான சங்கம் நடவடிக்கை எடுத்து உள்ளது.

கடந்த கால சம்பவங்களினால் யாழ்மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் மனத்தாக்கங்களில் இருந்து விடுபடவில்லை. அவர்களுக்கு உளவளப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கிராமங்கள் தோறும் உளவளப் பயிற்சி அளிக்க தொண்டர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

ஜூன் மூன்றும் திகதிதொடக்கம் தொடர்ந்து ஆறுமாதங்கள் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் 100 க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்து பேசி உளத்தாக்கத்துக்கு ஆலோசனையும்புத்தி மதிகளும் கூறுவார்கள்

தொடர்ந்து அத் தொண்டர்கள் பயிற்சி பெறுவார்கள்.

இப்பயிற்சி நெறிகளுக்கு பொறுப்பான திரு. எஸ்.எம். செல்வரத்தினம் இப்பயிற்சி பற்றி உதயனுக்குத் தெரிவித்ததாவது;

இன்று மனநிலை தாக்கப் பட்டவர்கள் ஆயிரக்கணக்கில் வாழ்கிறார்கள். அவர்களை மனத்தாக்கங்களில் இருந்து விடுபடச் செய்ய உளவள பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

இதற்காகவே தொண்டர்களைச் சேர்த்து பயிற்சி அளிக்கிறோம்.

இப்படி அவர் கூறினார். (க-3)

## "ஸ்ரீலங்கா விமர்சனம்"

கொழும்பு, மே 30

'ஸ்ரீலங்கா விமர்சனம்' [Sri Lanka Review] என்ற காலாண்டுச் சஞ்சிகை ஒன்றை ஜனாதிபதி செயலகம் வெளியிடுகிறது.

முதல் இதழ் வெளியாகியுள்ளது. ஜனாதிபதி பிரேமதாஸ ஜனசக்தித் திட்டம் பற்றி நிகழ்த்திய முக்கியஉரைகள் முதலாவதுஇதழில் இடம் பெற்றுஉள்ளன.

கண்கவர் வண்ணத்தில் அச்சிடப்பட்டுள்ள இந்தச் சஞ்சிகை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் விநியோகிக்கப்படும். [இ-எ]

## திருஞானசம்பந்தர் காட்டியவழி சமயத்துக்கு வரும்இன்னல்கள் உடனடியாக நிவர்த்தியாகும்

திருஞானசம்பந்தர் காட்டிய சமய வழியில் நாம் நடந்தால் எம் சமயத்துக்கு ஏற்படும் இன்னல்கள் நிவர்த்தியாகும்'.

இப்படிக் கூறினார் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் இடம் பெற்ற திருஞானசம்பந்தர் விழாவில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

விழாவில் கந்தசாமிகோவில் பிரதம செயலாளர் திரு.தேவராஜா, இந்து மாமன்றத் தலைவர் திரு. செல்லையா, சுத்தானந்த இந்து இளைஞர் மன்ற பொருளாளர் திரு.சற்குணம், அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை உப-தலைவர் திரு. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்கள். (இ-3)

# மக்களின் நன்மதிப்பும் பாராட்டும் பெற்றவர் வைத்தியமணி பிலிப்ஸ்

## மணி விழாவில் புகழாரம்

சாவகச்சேரி, மே 30

மக்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெறும் வைத்தியமணி பே. பிலிப் 50 ஆண்டுகளின் முன் எனது நல் மாணாக்கரில் ஒருவர் எனக் கூறுவதில் பெருமையும் பூரிப்பும் அடைகின்றேன். வருவாயைமட்டும்மேலாக மதியாது நோயாளியின் சேமத்தையே பெரிதாகக் கருதி அன்றுமுதல் இன்று வரை சேவையாகவே வைத்தியத் தொழில் புரியும் இவர் ஒரு சிறந்த பரம்பரை வைத்தியர் ஆவார்.

ஸ்ரீலங்கா ஆயுள்வேதக் கல்லூரி அதிபர் வைத்திய கலாநிதி ஏ. வி. இராசரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

மட்டுவில் வடக்கு ஆரோக்கிய வாசக வைத்தியசாலையின் வெள்ளிவிழாவும் வைத்தியமணி பே. பிலிப்ஸ்ஸின் மணிவிழாவும் திரு. ஏ. வி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைத்தார்.

கிளிநொச்சி நீதிபதி எஸ். சுரேந்திரன் திரு. பிலிப்ஸுக்கு 'வைத்திய வாருதி' எனும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

பண்டிதர் செ. சிவலிங்கம் வெள்ளிவிழா மலரை வெளியிட்டுவைத்தார்.

நகரசபைச்செயலாளர்திரு. த. நவரத்தினராசா முதலாவது பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை ஆசியுரை வழங்குகையில் சாவகச்சேரித்தொகுதியில் அமைந்த 39 அகதிகள் முகாம்களுக்கு இலவச வைத்திய சேவையை மேற்கொண்டபோது அவரது தொண்டைக் காணமுடிந்தது

குழந்தை உள்ளம் கொண்ட அவர் நோயாளர்களைப் பண்புடன் வரவேற்று வைத்தியம் செய்வதுடன் உதவிகளும் புரிவதைக் காணமுடிகிறது என்றார்.

நகராட்சி மன்றச் செயலாளர் திரு. த. நவரத்தினராசா, கைதடி சித்தவைத்திய பீடாதிபதி திரு.எஸ்.பவானி, முன்னாள் நகரசபைத் தலைவர் திரு எஸ். கே. மயில்வாகனம், லயன்ஸ் தலைவர் திரு. பி. தியாகராசா முதலானபலர் ஆசிஉரை வழங்கினர்.

மும்மதத்தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர். (இ-31)


# ★ வேலை வாய்ப்பு ★

**(1) குவைற்:**

(1) எயாபோட் கிளினேர்ஸ் — சம்பளம் - 50 KD.
வயது: 22 — 35 வரை - ஆங்கிலம் அல்லது அரபு தெரியவேண்டும்

(2) கனரக வாகனச் சாரதிகள் — சம்பளம் - 70 KD.
(வெளிநாட்டு லைசன்ஸ் - அனுபவச் சான்றிதழ்)

(3) வீட்டுச் சாரதிகள் -- சம்பளம் - 40 KD.
(5 வருட அனுபவச் சான்றிதழ்)

(4) விற்பனையாளர் (SALESMAN) சம்பளம் - 70 KD.
(5 வருட அனுபவச் சான்றிதழ்)

(5) அலுமினிய F) பிற்றர் ALUMINIUM FITTERS. — சம்பளம் 65 - KD
அனுபவம் அலுமினியம் DOORS WINDOWS ETC.

(6) பெண் சுத்திகரிப்பாளர் (FEMALE CLEANERS). — சம்பளம் - 30 KD.
வயது: 29 க்கு மேல்

(7) வீட்டுப்பணிப் பெண், (HOUSE MAID) வீட்டுப்பணிப்பையன் (HOUSE BOY) — சம்பளம் - 30 KD.

**(2) சவூதி:**

அல்ராஜ் கோழிப்பண்ணைத் தொழிலாளர் — சம்பளம் - 400 SR.

**(3) ஓமான்:**

சகல தரத்தினருக்கும் வேலை வாய்ப்பு உண்டு

மற்றும்: ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, கனடா (குடும்பத்துடன் மட்டும்) ஆகிய நாடுகளுக்கும் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# T. V. TRAVELS

BROWN ROAD, KOKUVIL.

[சி-2763]



உ
கணபதி துணை
கோப்பாய் வடக்கு
"பிரதிஷ்டா கிரியா கலாபமணி"
சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள் எழுதிய
"சிவார்ச்சனு சந்திரிகா தீபிகை"
என்னும்

## நூல் வெளியீட்டு விழா

காலம்: 31.05.1989 புதன்கிழமை பி.ப. 2.00 மணி
இடம்: நல்லூர் சிவன் கோவில்
தலைவர்: பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் (யாழ். பல்கலைக்கழகம்)

இங்ஙனம்
சு. இராஜேந்திரக் குருக்கள் -நீர்வேலி
ம. முத்துக்குமாரசாமிக் குருக்கள் -கோப்பாய்
(விழா அமைப்பாளர்கள்)

(சி/2570)



# TEAM PORTS LTD.,

P. O. Box 8603,
HONG KONG.

ஹொங்கொங் (Hong kong) நாட்டில் உடனடி வேலைவாய்ப்புக்கான அரிய சந்தர்ப்பம்!

- ✶ கட்டடப்பகுதி
- ✶ பெருந் தெருக்கள்
- ✶ சுரங்கப் பகுதி
- ✶ ஹோட்டல் ஆன துறைகளில் உடன் வேலை வாய்ப்புகள்!

**கட்டடப் பகுதி**

- ★ வாய்க்கால் அமைப்பாளர்கள்
- ★ மெக்கானிக்
- ★ பெயின்ரர்
- ★ சாரதிகள்
- ★ நில அளவையாளர்கள்
- ★ பட வரைஞர்கள்
- ★ தச்சுத் தொழிலாளர்கள்
- ★ பொறியியலாளர்கள்
- ★ பிளம்பேர்ஸ்
- ★ லேபறேஸ்
- ★ மேசன்
- ★ எலெக்ரிசன்
- ★ மற்றும் சகல கட்டடப் பகுதி வேலைகளுக்குமான ஆட்கள்.

**ஹோட்டல் பகுதி:**

- ● முகாமைத்துவப் பதவிக்கு (Management) கீழ்ப்பட்ட சகல ஹோட்டல் வேலைகளுக்குமான ஆட்கள்.
- ● பெண்களும் விண்ணப்பிக்கலாம்.
- ● ஆங்கிலம் பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ● வயது: 20 இலிருந்து 35 வரை

உரிய தஸ்தாவேஜுகளுடனும், 5 போட்டோக்களுடனும்
கீழ்க்காணும் முகவரியில்
30-05-89 செவ்வாய் (இன்று)
31-05-89 புதன் (நாளை) ஆகிய நாட்களில் நேரில் சந்திக்கவும்.

நேரம்: காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

# S. K. மூர்த்தி

ஹோட்டல் சுபாஸ்
விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம்.

நம்பிக்கை! நாணயம்!! துரித பயணம்!!!

[11096]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு: 24 - 02 - 1935
இறப்பு: 10 06 - 1988

### திரு. க. தணிகாசலம்

காவியத்தைப் பாடுவதற்கு கவிதைகள் பல உண்டு
உம் காவியத்தைப் பாடுவதற்கு எம் கண்ணீரே உண்டு
சிரித்து வந்த பூ முகத்தில் சித்திரம் கண்டு
சிதறுகின்றதே எம் நெஞ்சில் கண்ணீர் இன்று!
நீங்கள் கொண்ட செயல் கண்டு
பொறுக்கவில்லையே உம் நண்பர்களுக்கு அன்று
வாழ நினைத்தது உம் மனம் அன்று
வாழ்வு முடிந்தது நண்பர்களின் வஞ்சம் நின்று
ஏங்குதையா எம் மனம் இன்று!

ஓராண்டு ஓடி மறைந்தாலும் எம் இதயங்களில் இருந்து உம் நினைவுகளைச் சாகடிக்கவே முடியாது.

மனைவி, மக்கள், மருமக்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [819]


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

1983 இனக் கலவரத்தால்

# பாதிக்கப்பட்ட ஊழியருக்கு வேலை வழங்குவதில் அதிகாரிகள் அசமந்தப் போக்கு

## ஜனாதிபதிக்கு ஊழியர் இணைப்புக்குழு முறையீடு

யாழ்ப்பாணம். மே30

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மீண்டும் வேலைவழங்குவது தொடர்பாக அரசால் 25-04-88இல் வெளியிடப்பட்ட 14/88 சுற்றுநிருபத்தின்படி மீண்டும் வேலை வழங்க திணைக்கள அதிகாரிகளும் கூட்டுத்தானத் தலைவர்களும் அசட்டையாக இருந்துவருகிறார்கள். ஆகவே உடனடியாக அச்சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்தி அவர்களின் கஷ்டம் நீங்க உதவுங்கள்.

இப்படியான அவசர கோரிக்கையொன்றை ஜனாதிபதிக்கு பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கும் பொதுநிர்வாக அமைச்சுக்கும் இணைப்புக்குழு அனுப்பியுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இச்சுற்றுநிருபத்தின்படி 500க்கு மேற்பட்ட ஊழியர்கள் நிவாரணம்கோரி விண்ணப்பித்தனர். இதில் 400 பேர்வரையில் மீள வேலையைப் பெறவில்லை.

கடந்த ஆறு வருடங்களாக மிகக்கஷ்டமான நிலையில் அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உடனடியாக இச்சுற்றுநிருபத்தை அமுல் செய்ய உதவுங்கள்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## மாநகரசபை ஆணையாளருக்கு மகஜர்

யாழ் சென், ஜேக் சனசமூக நிலையச் சுற்றுடலில் குடிநீர், மின்சாரம், சுகாதாரம் போன்ற அத்தியாவசிய தேவைகள் பாதிக்கப்பட்டிருப்பது சம்பந்தமான மகஜர் ஒன்று யாழ்-மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, றெக்ளமேசன் பிரதான வடிகாலின் சீர்கேடு, 1987ஆம் ஆண்டு ஷெல் அடியால் பாதிக்கப்பட்ட மின் வயர்கள் சீரமைக்கப் படாதது போன்றவை மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. (க-51)

ஆவரங்கால், புத்தூர்ப் பகுதி

## அசம்பாவிதங்கள் குறித்து அமைதிப்படை விசாரணை

### மக்கள் கண்ணீர் மல்க முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 30

கடந்த 15 ஆம் திகதியும், அதனை அடுத்த தினங்களிலும் ஆவரங்கால், புத்தூர்ப் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் பற்றி அமைதிப்படை உயரதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரஸ்தாப தினங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களில் 6 பேர் கொல்லப்பட்டனர். இருபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். பெண்கள் உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர் சிலர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

நூற்றுக்கணக்கானோர் ஆவரங்கால், புத்தூர் பகுதிகளை விட்டு வெளியேறி அகதிகளாக வெளியிடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து ஆவரங்கால், புத்தூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அமைதிப்படை உயரதிகாரிகளுக்கு மகஜர் மூலமும், நேரிலேயும் சம்பவம் பற்றி முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாடுகளை அடுத்து வடமராட்சிக்கு பொறுப்பான அமைதிப்படை அதிகாரி பிரஸ்தாப பகுதிகளுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட இடங்களையும், பாதிக்கப்பட்டவர்களையும், மற்றும் பொதுமக்களையும் சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டார்.

மக்கள் கண்ணீர் மல்கிய நிலையில் தமக்கு ஏற்பட்ட இன்னல்களையும், அனுபவித்த கொடுமைகளையும் அந்த அதிகாரியிடம் முறையிட்டனர். (ஒ-9)

## மீனுக்கு வலை வீச...

கல்குடா, மே 30

மீன்பிடிக்க வலையை வீசினார்கள் மீன்பிடித் தொழிலாளர்கள். அகப்பட்டதோ மீனுக்குப் பதிலாக ஒரு பசுக்கன்று! அதுவும் உயிருடன்.

இது நடந்தது வாழைச்சேனையில் உள்ள கற்குடாவில்.

இரண்டு மாதம் நிறைந்த இக்கன்று தற்பொழுது பட்டியடிச்சேனை என்னும் ஊரில் அமைந்துள்ள கிருஷ்ணன் கோயிலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இக்கன்றின் நெற்றியில் சங்கு சக்கர வடிவமுடைய ஓர் அமைப்புத் தென்படுகிறதாம். 'குட்டிக் கோவிந்தன்' என்று பெயர் சூட்டப்பட்ட இக்கன்றைப் பார்க்க ஏராளமான மக்கள் கூடுகின்றனர். (க)

குழந்தைகள் பாதுகாப்பு நிதியத் தூதுக்குழு

## யாழ். நகரைப் பார்வையிட்டது

யாழ்ப்பாணம், மே 30

குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் தூதுக்குழுவினர் சனிக்கிழமை யாழ். நகரின் பலபகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

திரு. வோக்கர், திரு. லாயர் செல்வி மரியன் ஆகிய மூவர் இந்த குழுவில் அடங்கியுள்ளனர்.

யாழ் நகரில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பு நிதிய காரியாலயங்கள் யாழ். போதனா வைத்தியசாலை என்பவற்றிற்கும் இவர்கள் சென்றிருந்தனர். [இ-9]

## விஜயம்

அராலி, மே. 30

மன்னார் மாவட்ட விவசாயிகள் குழு ஒன்று யாழ் மாவட்ட விவசாய செய்கைகளை நேரில் பார்வையிட்டு அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ். மாவட்டத்திற்கு வருகிறது. [உ-12]

## இப்படியும் ஒரு நிபந்தனை

கொழும்பு, மே 30

அரசு அறிவித்திருக்கும் 25 ஆயிரம் ஆசிரியர் நியமனத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்போர் நேர்முகப் பரீட்சைக்கு தங்கள் பெற்றோர்களிடமிருந்து அத்தாட்சிப்பத்திரம் வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தினமும் தங்களை வணங்குவதாக அந்த அத்தாட்சிப் பத்திரத்தில் பெற்றோர்கள் அத்தாட்சிப் படுத்த வேண்டும்.

அமைச்சர் இதுசம்பந்தமாக விடுத்த பணிப்புரை இரண்டு வாரங்களுக்கு முன்னர் அமுலுக்குவந்தது. (இ-எ)

## திறந்து வைத்தார்

குருநகர், மே 30

குருநகர் சனசமூக நிலையத்தால் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்த புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண- பிதா பி. எம். இம்மானுவேல் அடிகளார் இப்பகுதியைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இப்பகுதிக்கு உலக தரிசனமும், ஏ. எல். எம். எஸ். ஸ்தாபனமும் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. [ச-51]

## பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் சேமிப்புத் திட்டம்

### பருத்தித்துறை வைபவத்தில் முகாமையாளர் தகவல்

வடமராட்சி மே 30

வடமராட்சிப் பாடசாலைகளில் மீண்டும் மாணவர் தேசிய சேமிப்புவங்கி திறக்கப்படும்.

அண்மையில் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் பத்தாண்டுப் பூர்த்தியும், தேசிய சேமிப்பு உண்டியல் வழங்கல் விழாவும் புலோலியில் அதன் காரியாலயத்தில் நடைபெற்ற போது முகாமையாளர் கே. கமலசேகரம் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்கூறியதாவது:

இன்றைய மாணவர்களின் – சிறுவர்களின் சேமிப்புக்களே நாளைய பெரும் ஏகபோக சொத்துக்களின் உருமையாளர்களை உருவாக்கும்.

எனவேதான் எமது தேசிய சேமிப்பு வங்கி அதற்குத் தூண்டுகோலாக சேமிப்பு உண்டியல்களை வழங்கி ஊக்குவிக்கின்றன.

இதன் அடிப்படையாக கடந்தகாலகலவரங்களுக்கு முன்பு எம்மால் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் தேசிய சேமிப்பு வங்கிகளை மீண்டும்பாடசாலைகளில் ஆரம்பிக்க உள்ளோம்.

இப்படி அவர் கூறினார்.

சுவாமி சித்ரூபானந்தாவின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திரு. ஏ. சந்திரசேகரம் [வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்) ஏ. தங்கராசா (வடமராட்சி கோட்டக்கல்வி உத்தியோகத்தர்). எஸ். வீரபத்திரன் [வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி], எஸ். சிறீஸ்கந்தராசா [வடபிராந்தியப்போக்குவரத்து முகாமையாளர்] பி. மாணிக்கவாசகர் (புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) எம். சிவானந்தன் (பரு. தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் வங்கி முகாமையாளர் கே. கமலசேகரம் சேமிப்பு வங்கி உண்டியல்களை இலவசமாக வளங்கினர். (இ-160)

## ஹாட்லியின் 150 ஆண்டு நினைவு

வடமராட்சி, மே 30

ஹாட்லிக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நினைவுத்தபால் தலை முன்பு திட்டமிட்டபடி ஹாட்லிக் கல்லூரியில் அல்லது கொழும்பில் வெளியிடப் படவுள்ளதாக கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-160)

## உலக தரிசனம் உதவி

குருநகர், மே 30

1987ஆம் ஆண்டு அக்டோபர் அனர்த்தங்களால் சேதமடைந்த வீட்டுக் கூரைகளை புதிதாக அமைப்பதற்கு 'உலக தரிசனம்' அஸ்பெஸ்டா சீற், ஓடுகள் முதலியவற்றை வழங்கியுள்ளது.

சமீபத்தில் குருநகர், றெக்ளமேசன் சென். ஜேக் சனசமூக நிலையத்தில் வைத்து 41 குடும்பங்களுக்கு இப்பொருட்கள் வழங்கப்பட்டன. (க-51)

## கடன் உதவிச் சங்கம் ஆரம்பம்

குருநகர், மே 30

யாழ். சென். ஜேக் சனசமூக நிலையத்தில் சிக்கனக் கடன் உதவிச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சிக்கனக் கடனுதவிச் சங்கத்தின் அனுசரணையுடன் சமாசத் தலைவர், சங்க உத்தியோகத்தர் திரு. யோகநாதன் முன்னிலையில் சென். ஜேக் சனசமூக நிலையத் தலைவர் திரு. எம். எட்வேட் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 100 பேர் உறுப்பினர்களாக பதிவு செய்தனர்.

நிலையச் செயளாளர் திரு. வி. எம். ஜெருட் உறுப்பினர்களுக்கு சிக்கனக் கடனுதவிச் சங்கச் செயற்பாடுகளை விளக்கிக் கூறினர். (ச-51)


# கண்டு களியுங்கள்

## சிங்கப்பூர், பாங்கொக், மாலே!

படம் பிடியுங்கள்! நெஞ்சை கொள்ளைகொள்ளும் காட்சிகள் நிறைந்த சிங்கப்பூர், பாங்கொக், மாலே ஆகிய இடங்களுக்குச் செல்லும் அரிய வாய்ப்பைப் பெறுங்கள். ஆம், கொடக் வழங்கும் 'கண்டு களியுங்கள்' போட்டியில் வெற்றியீட்டுவோருக்கே இந்த வாய்ப்பு வழங்கப்படவிருக்கின்றது. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழ்க் காணப்படும் கேள்விக்கான விடையை எழுதி அதனை கொடக் கலர் புகைப்படச் சுருள் ஒன்றின் வெற்றுப் பெட்டியுடன் மில்லர்ஸ் லிமிட்டெட், 50,யோக் வீதி கொழும்பு 1. என்ற முகவரிக்கு ஆனி 15ம் திகதி 89 க்கு முன் அனுப்பி வையுங்கள்.

கொடக்கினால் மாத்திரமே வழங்கக்கூடிய நிஜவர்ணங்களின் உயிர்த்துடிப்பையும் இங்கிதமான உள்ளுணர்வுகளையும் விரும்பி நாடும் அதிஷ்டசாலிகளான படப்பிடிப்பாளர்களுக்கென 410 பரிசுகள் காத்திருக்கின்றன.

மகத்தான இறுதிச் சீட்டிழுப்புப் பரிசுகள்

1ம் பரிசு — சிங்கப்பூர் சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்

2ம் பரிசு — பாங்கொக் சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்.

3ம் பரிசு — மாலே சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்.

4ம் - 10ம் பரிசுகள்: 07 கொடக் புகைப்படக் கருவிகள் (கமரா)

11ம் - 110ம் பரிசுகள்: 100 கொடக் பணப்பைகள்.

மேலும்

மே 1, மே 15, மே 31 ஆகிய தினங்களில் 3 சீட்டிழுப்புகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு சீட்டிழுப்பிலும் 100 கொடக் ரீ-சேட்டுகள் பரிசாக வழங்கப்படும். எனவே விரையுங்கள் கண்ணுக்கு விருந்தளிக்கும் வெளிநாட்டு விடுமுறைப் பயண வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள உங்கள் கமராவுக்கு வேலை கொடுங்கள்!

போட்டி விதிகள்

1. மில்லர்ஸ் லிமிட்டெட், தொர்லன் லங்கா (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. போட்டி முடிவு தினம் ஆனி 15ம் திகதி. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.
3. ஒருவர் எத்தனை பிரவேசப் பத்திரங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் கொடக் கலர் ஃபில்ம் வெற்றுப்பெட்டி இணைக்கப்படல்வேண்டும். பிரவேசப்பத்திரக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கொடக் கலர் ஃபில்ம் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம். பிரவேசப் பத்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி: மில்லர்ஸ் லிமிட்டெட் 50, யோக் வீதி கொழும்பு 1.




பிரவேசப் படிவம்

கேள்வி: சோல் நகரில் 1988 இல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் உத்தியோகபூர்வ புகைப்படச்சுருள் எது?

பதில்: ______ பெயர்: ______

முகவரி: ______

மேலதிக படிவங்கள் தேவைப்படின் நீங்களே தயாரித்துக் கொள்ளலாம். சகல பிரவேசப் படிவங்களும் மில்லர்ஸ் லிமிட்டெட், 50, யோக் வீதி கொழும்பு 1. என்ற முகவரிக்கு ஆனி 15ம் திகதி 89 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கொடக் கலர் ஃபில்ம் போட்டி' என்று குறிப்பிடவும்.

வர்ணத்தின் எழில் ஜாலங்கள் காட்டும்கொடக்.

PRODUCTS BY Kodak

JWT ML 2828


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப்போட்டிக்கு ஷப்ரு - சென்றலைட் (சொக்):

யாழ்ப்பாணம், மே 30

ஷப்ரு நிதிநிறுவனத்தின் ஆதரவில் ஜொலிஸ் ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியில் கடந்த ஞாயிறு நடைபெற்ற அரை இறுதி ஆட்டங்களில் "பி" பிரிவில் ஷப்ரு அணியும் "ஏ" பிரிவில் சென்றலைட் (சொக்) அணியும் வெற்றி பெற்றன.

இறுதிப் போட்டிகள் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கடந்தஞாயிறு நடைபெற்ற அரைஇறுதி ஆட்டத்தில் "பி" பிரிவில் ஷப்ரு விளையாட்டுக்கழக வீர்ஆர்.விஜய

## விஜயகுமார் 120 ஓட்டங்கள்

குமார் அபாரமாக ஆடி 6 சிக்சர்களையும் 14 பவுண்டரிகளையும் உள்ளடக்கிய 120 ஓட்டங்களையும் பெற்ருர்.

இவர் பெற்ற ஓட்ட எண்ணிக்கையே இப் போட்டித் தொடரில் தனி ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாகும்.

சென்றலைட் நீல) அணிக்கெதிரான இப் போட்டியில் ஷப்ரு அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஷப்ரு அணி 26 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு இப் போட்டித் தொடரின் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையான 237 ஓட்டங்களைப் பெற்றது.

ஆர்.விஜயகுமார் 120, எஸ். பி.எஸ். இளங்கோ ஆட்டமிழக்காமல் 31, எஸ். முருகவேள் 29, ஏ. அன்றூகிறேஷியன் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சதீஸ்காந்தன், ராஜ்குமார், சசிதரன், ரகுதாஸ், மகிந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய சென்றலைட் (நீல) அணி 26 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

சிறீசங்கர் 33, சஜித் 16, நிரஞ்சன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் எஸ்.பி.எஸ், இளங்கோ, வை. ஜெயந்தன்ா எஸ். சுரேஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஆர். விஜயகுமார் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டிக்கு டீ. எம். வேதாபரணம், எஸ். உமாகாந்தன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (இ-6)

## வைத்தீஸ்வரா பவளவிழா

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவைப் பவளவிழாவாகச் சிறப்பாக கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்காக பாடசாலை அபிவிருத்திச்சபை, பழையமாணவர்கள் ஆசிரியர்களைக் கொண்ட ஒரு விழாக்குழு அமைக்கப்பட்டுள்ளது. விழாவை முன்விட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-69)

## துணுக்காய் முகாம் மூடப்பட்டது

மாங்குளம், மே 30

கடந்த 23 ஆம் திகதி [illegible] மாங்குளம் துணுக்காய் வீதியில் அமைந்துள்ள அமைதிப்படை முகாம் மூடப்பட்டுள்ளது.

முகாம் நீக்கப்பட்டபடியால் பொதுமக்கள் மிகவும் இலகுவாகப் பிரயாணம் செய்யக் கூடியதாக இருக்கிறது.

இதே வேளை வவுனிக்குளம், துணுக்காயில் அமைந்துள்ள அமைதிப்படை முகாம்கள் தொடர்ந்து இயங்க இருக்கின்றன.

மாங்குளத்தில் யாழ் வீதி, கண்டி வீதி, முல்லை வீதியில் அமைந்துள்ள சோதனை காவல் நிலையங்கள் தொடர்ந்தும் அவ்விடங்களிலேயே இருக்கின்றன. [க - 94]

## கடைகள் தொடர்ந்து மூடியநிலையில்

சாவகச்சேரி, மே 30

சாவகச்சேரியில் வர்த்தக நிலையங்கள் தொடர்ந்து பூட்டப்பட்டு இருக்கின்றன.

சனிக்கிழமை வழமைபோல் சந்தை கூடியது. மக்கள் குறைவாகவே காணப்பட்டனர்.

பொதுமக்கள் தமது அன்றுட தேவைக்கான பொருள்களைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மட்டுமே திறக்கப்பட்டுள்ளன. [இ - 31]

# சென்றலைட் அணி வெற்றிக்கு
## சண்முகலிங்கத்தின் பந்துவீச்சு வழிவகுத்தது

யாழ்ப்பாணம் மே 30

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஷப்ருசுற்றுக்கிண்ணத்துக்காக "ஏ" பிரிவில் நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து ஆடிய சென்றலைட் (சொக்) அணி வெற்றியீட்டியது:

முதலில்துடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி 28 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்களைப்பெற்றது.

றஜீவன்29,விவேகானந்தன் 26,சாந்திஹறன் 24,முகுந்தன் ஆட்டமிழக்காமல் 17ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் குகன், துஷ்யந்தன், பாலகுமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கிருபானந்தன் 1 விக்[illegible]. கெட்டையும் கைப்பற்றினர்.

50 ஓட்டங்கள் பெறப்படும்வரை விக்கெட் இழப்பின்றி ஆடிய கொக்குவில் அணியின் விக்கெட்டுகள் இறுதி 75 ஓட்டங்களினுள் மளமளவென சரிந்தன.

சண்முகலிங்கத்தின் அபாரப் பந்து வீச்சே சென்றலைட் அணியின் வெற்றிக்குப் பெரிதும் வழிகோலியது.

பின்னர் ஆடிய கொக்குவில் அணி 25.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.

நற்குணேந்திரன் 35, விஜயநாதன் 20, விஸ்வநாத் 18, உமாசங்கர் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

சண்முகலிங்கம் 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை. விஜயநாதன், பாலகுமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டிக்கு டீ. எம். வேதாபரணம், எஸ். உமாகாந்தன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (இ - 6)


# PATRICIAN INSTITUTES
# தொழினுட்ப பயிற்சி நெறிகள்

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

### ✱ Computer Programming in Data Processing and Basic Language
(6 மாதகால பயிற்சி நெறி)

Practicals on — Laser XT, AT, 286, 386, (I.B.M. Compatables)
Commodore and Apple II Computers
Lectures and practicals in A. C. Room

Lectures by — Mr. SUNDRARAJAH, B. Sc. (Eng Hons (U.K.) M CS and Mr. K. K. VIMALARAJAH, Dip in comp (U.K.)

புதிய பிரிவு 10 - 06 - 89 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும். (வார இறுதி வகுப்புக்கள்)
(ஒரு பிரிவில் 15 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்)

### ✱ Diploma Course in Draughtsmanship (civil)

SUBJECTS:-
(i) Draughtsmanship Including Reinforced Concrete Detailing
(ii) Building Technology
(iii) Land Surveying [Theory & Field work]
(iv) Builders Quantities & Estimating

கல்வித் தகைமை:- G. C. E. (O/L) in six Subjects Including Mathematics and English Language
காலம்:- 1 வருடம்
ஆரம்பம்:- 02 - 06 - 1989 வெள்ளிக்கிழமை
Lectures by:- C. DURAIRAJAH Dip in Advanced Building Studies (U.K.), I Q S part I

### ✱ City and Guilds of London Institute Quantity Surveying
part I (6 மாத கால பயிற்சிநெறி)
ஆரம்பம்:- 05 - 06 - 1989 திங்கட்கிழமை காலை 9.00 மணி

### ✱ Electrical Wiring
(3 மாதகால பயிற்சிநெறி)
05 - 06 - 1989 காலை 9.00 மணிக்கு புதிய பிரிவு ஆரம்பமாகும்.

பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன:

- Motor Mechanism - மோட்டார் மெக்கானிசம் (6 மாதம்)
- Motor Winding - மோட்டர் வைண்டிங் (4 மாதம்)
- Arc Welding - மின் ஒட்டு வேலை (3 மாதம்)
- Lathe Operation - கடைச்சல் இயந்திர இயக்கம் (3 மாதம்)
- Wood Work - மரவேலைப் பயிற்சி (3 மாதம்)

★ மேற்படி பயிற்சி நெறிகளில் பயில விரும்புவோர் விண்ணப்பப்படிவத்தை பெற்று உடன் பதிவு செய்து கொள்ளவும்.
★ கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
★ கலவரங்களால் பாதிக்கப்பட்ட அல்லது முழுக்கட்டணமும் செலுத்த இயலாதவர்களுக்கு பங்கு குருவானவரின் சிபார்சின் பேரில் Hudec (மனித முன்னேற்ற நடு நிலையம்) ஊடாக அவர்களுக்கு சலுகைக் கட்டண வசதி செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் மின்சார உபகரணங்களும் நீர் இறைக்கும் இயந்திர மோட்டார்களும் வேறுவகையான மோட்டார்களும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் குறைந்த செலவில் விரைவில் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

Registrar
PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES
59, St. Patrick's Road,
JAFFNA.


## பல்கலைக்கழக மாணவரை காணவில்லை

கொழும்பு, மே 30

பல்கலைக்கழக மான்யக் கமிஷன் வட்டாரங்களின்படி றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த7 மாணவர்கள்,பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 5 மாணவர் களணி மற்றும் மொரட்டுவ பல்கலைக் கழகங்களில் இருந்து தலா ஒவ்வொருமாணவர்,ஜயவர்த்தனபுரபல்கலைக்கழகம்மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இருந்து தலா 2 மாணவர்--ஆக மொத்தம் 18 மாணவர்காணமற் போய் விட்டனர்.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறிய முடியாமல் உள்ளதாகக் கூறப்படுகின்றது. [க-எ]

## நூலகத்துக்கு நிதியுதவி

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு நூலக வசதிக்காக 50 ஆயிரம் ரூபா அரசால்வழங்கப்பட்டுள்ளது.

இப்பணத்தில் இருந்து நூலகத்துக்குத் தேவையான நூல்கள், சஞ்சிகைகளை வாங்க நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது. (ஒ - 3)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
கனகசபை தனபாலசிங்கம்
(செட்டி)

மறைவு: 30.05.85

உமது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

தாய், சகோதரர்கள், சகோதரிகள், மக்கள், மருமக்கள்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். [811)

## ஈராண்டு நினைவஞ்சலி



இராஜகோபால் இராஜ்மோகன்
(மருத்துவபீட மாணவன், பேராதனை)

அன்னை மடியில்: 07- 03- 1968
ஆண்டவன் அடியில்: 30- 05- 1987

எமதருமைச் செல்வமே!
எம்மைவிட்டு நீ பிரிந்து
ஈராண்டு போனதடா!
எம் உயிர் எம்மைவிட்டுப் போகும்வரை
எம்நெஞ்சில் இருந்து உன்நினைவு போகாது!
எம்முன்னே நீ என்றும் நடமாடும் தெய்வமடா!
எம்கண்ணில் வடியும் நீர் செந்நீர்த் துளிகளடா!
என்று நீ மீளவந்து எம்துயரைத் தீர்ப்பாயோ?
அன்றுவரை எமக்கு ஆருத்துயரமடா!

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரங்கள், சித்தப்பாமார், அன்ரிமார், மாமா, மாமி.

[illegible],
[illegible]. (818)

## ஈராண்டு நினைவஞ்சலி



ஆ. ஆனந்தராஜா (ஆனந்தன்)

தாயின் மடியில்: 24- 04- 1969
ஆண்டவன் அடியில்; 30- 05- 1987

ஆண்டுகள் பல சென்ருலும் எங்கள் நெஞ்சினின்றும்
நீங்காத ஆருயிர் நண்பனே!
மாண்ட உன் நாளை எண்ணி ஈராண்டு கழிந்தனவோ?
இன்னல்கள் நிறைந்த ஈராண்டு!
இதயங்கள் வெதும்பிய ஈராண்டு!
இறைவனணைப்பின் ஈராண்டில்!

உனை நினைவு கூரும்!
நண்பர்கள், பெற்ருேர்கள்-

வல்வெட்டி. (822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம்பொன் வேளாங்கண்ணி யாத்திரைத் தல திருநாள் சிறப்பிதழ்


## அழைக்கிறோம்

இன்று மாலை 5 மணிக்கு கரம்பொன் வேளாங்கண்ணி யாத்திரைத் தலத்தில் நற்கருணை விழா ஆரம்பமாகும். நாளைக்காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி யாழ் ஆயர் அவர்களின் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

—கரம்பொன் பங்குத்தந்தை

*

## வாழ்த்துகிறோம்

கரம்பொன் புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் அருள்நிறை ஆசீர் உங்கள் வாழ்வில் நிறையப் பொழியப்பட அன்னையை இரந்து மன்றாடி வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## ★ வாழ்த்துகின்றோம் ★

**ஹோம் டீ நீட்ஸ்**
பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.

**வசந்தா ஸ்ரோர்ஸ்**
59, மெயின் வீதி,
ஊர்காவற்றுறை.

**வேளாங்கண்ணி ஸ்ரோர்ஸ்**
பிறவுண் கடை,
கரம்பொன்.

**வசந்தா பேக்கரி**
ஒழுவில் வீதி,
கரம்பொன்.

**சாம்ஸ் சுப்பர் மாக்கற்**
கரம்பொன் கிழக்கு,
கரம்பொன்.

**அல்பிறட் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.

**றீகல் பேக்கரி**
சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை.

**கயிற்ஸ் டிஸரிபியுட்டர்ஸ்**
பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.

**இராசா காட்வெயர் ஸ்டோர்ஸ்**
பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.


## அருள் மழை பொழியும் ஆரோக்கிய மரி அன்னை வேண்டிய வரம் அருள்வார்

உலகளாவிய ரீதியில் அன்னைக்கு எழுப்பப்பட்டுள்ள ஆலயங்களும், யாத்திரைத் தலங்களும் தேவ அன்னை உலக மக்களின் தாய் என பதை மிகவும் தெளிவாக நிரூபிக்கின்றன. இன, மத, மொழி நிற வேறுபாடின்றி அனைத்து மக்களையும் இணைத்துப் பிடிக்கிறது. அனைத்து மக்கள் மீதும் அன்னையின் அருள்மழையைப் பொழியச் செய்கிறது.

பிரான்சில் ஒரு லூர்து, போர்த்துக்கலில் ஒரு பாத்திமா, இத்தாலியில் ஒரு லொரெட்டோ, இங்கிலாந்தில் ஒரு வால்சிங்காம், அயர்லாந்தில் ஒரு க்னக்கும், வட இந்தியாவில் ஒரு மரியாயின் குன்று, தென் இந்தியாவில் ஒரு வேளாங்கண்ணி, இலங்கையில் ஒரு மடு, இவையும் இன்னும் இங்கு குறிப்பிடப்படாதவையும் மேலே எழுதப்பட்டவைக்குச் சான்றாகும்.

யாழ். மறை வட்டத்தில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் பதினாறு திருவிழாக்கள் மரியன்னையின் திருவிழாக்களாகும். யாழ். மறை வட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்று அன்னையின் பக்தியால் யாத்திரீகர்கள் கூடும் யாத்திரைத் தலங்களில் தீவுப் பகுதியில் உள்ள கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத் தலமும் ஒன்றாகும்.

திருச்சபையில் மரியன்னை பக்தியானது அண்மைக்கால வரலாறு கொண்ட தல்ல. ஆதித்திருச்சபையிலே எபேசு திருச்சங்கம் மரியன்னையை இறைவனின் அன்னை என்று அறிவித்ததைத் தொடர்ந்து மரியன்னை பக்தி வேகமாகப் பரவி வளர்ந்தது.

இந்தியாவிலும் வேளாங்கண்ணி யாத்திரைத் தலம் பல நூற்றாண்டு கால சரித்திரம் கொண்டது. இதற்கு அன்னையின் மூன்று காட்சிகள் வழிவகுத்துள்ளன.

பதினாறும் நூற்றாண்டில் அன்னை பால்க்காரச் சிறுவனிடம் குழந்தைக்குப் பால் கேட்டதும் பால் குறையாது பொங்கி வழிந்ததும் முதலாவது காட்சி.

மற்றுமொருமுறை முடமான சிறுவனுக்கு அன்னை தோன்றி அவனிடம் மோர் வாங்கிக் குடித்ததும் அவனைக் குணப்படுத்தி தனக்கு ஆலயம் அமைக்கக் கேட்டதும் இரண்டாவது காட்சி.

மேல் கூறப்பட்ட இரண்டும் பதினாறும் நூற்றாண்டில நடந்தன. மூன்றாவது காட்சி பதினேழாம் நூற்றாண்டில் நடந்தது. போர்த்துக்கேயக் கப்பல் வங்காள விரிகுடாவில்



குழலும் யாழும்
குரலினில் ஒலிக்க
கும்பிடும் வேளையிலே
மழலை இயேசுவை
மடியினில் சுமந்து
மாதா வருவாளே!

சிக்கி அன்னைக்கு ஆலயம் அமைப்போம் என்று நேர்ந்த பின் கரை சேர்ந்தமையால் அன்னைக்கு ஆலயம் அமைத்தனர்.

அந்த ஆலயம்தான் இந்தியாவின் வேளாங்கண்ணி யாத்திரைத் தலமாகும். இந்தியாவில் இருந்து அன்னையின் பக்தி இலங்கைக்கும் பரவியபோது உருவாக்கப்பட்ட ஆலயங்கள் யாத்திரைத் தலங்களில் யாழ். மறை வட்டத்திற்குரிய கரம்பொன் வேளாங்கண்ணி யாத்திரைத்தலமும் ஒன்றாகும்.

தீவுப் பகுதியின் பல பக்கங்களில் இருந்தும் யாழ் நகரின் பல பாகங்களில் இருந்தும் யாத்திரீகர்களையும் பக்தர்களையும் தன்னிடம் ஈர்த்துக் கொள்ளும் கரம்பொன்வேளாங்கண்ணி யாத்திரைத் தலம் 1974 ஆம் ஆண்டு ஒரு சிறிய முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டுதான் இது யாழ். மறை வட்டத்திற்குரிய யாத்திரைத் தலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆரம்ப முயற்சியில் இருந்து 15 ஆண்டுகளை இவ் வருடம் நிறைவு செய்தாலும் யாழ். மறை வட்டம் அங்கீகரித்து வருகிற ஆண்டுடன் 10 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. 10 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் போது அன்னைக்குரிய புதிய ஆலயத்தை அமைக்க அன்னை அருள் புரிய வேண்டுமென பக்தர்கள் எல்லோரும் செபிப்போம்.

வாழ்க்கையின் பல்வேறு பட்ட துன்பங்கள், வேதனைகள், வருத்தங்கள், நோய், நோக்காடுகள், வாழ்க்கைத் துணைதேடும்பிரச்சினைகள், பிரிந்து வாழும் குடும்பங்களின் நிலைகள், அமைதி இல்லா வாழ்க்கை முறைகள் என்பவற்றில் எல்லாம் அன்னை தொடர்ந்தும் எம்மை வழிகாட்டவும் உறுதிப்படுத்தவும் வேண்டி நிற்போம்.

உலக துன்பங்களாலும் மன வேதனைகளாலும் அல்லலுறுகின்றவர்களுக்குஅன்னையாகவும் ''உமது உதவியை நாடியவர் ஒருபோதும் கைவிடப்படவில்லை'' என்பதை எப்போதும் நிறைவு செய்பவளாகவும் அன்னை என்றும் இருப்பாள் என்ற நம்பிக்கை நம்மிடம் இருக்கட்டும்.

அருள்மழை பொழியும் ஆரோக்கிய அன்னை வேளாங்கண்ணித் தாய் வேண்டிய வரமருள்வாள். வேண்டியபோது துணை நிற்பாள். எமது தனிப்பட்ட வாழ்விலும் பொதுவான வாழ்விலும் நமது மன விருப்பங்கள். ஆசைகள், ஏக்கங்கள், குடும்பத் தேவைகள் என்பவற்றிற்காக வேண்டி நிற்போம். எமது கடந்தகால அனுபவங்களால், எம் மண்ணின் வேதனை மிக்க நிகழ்வுகளால் நடந்துவிட்ட எல்லா அனுபவங்களிலும் விடுதலை பெற்ற நாம் எமது மண்ணையும் மக்களையும் காத்திட வேண்டுவோம். நடந்தவை மீண்டும் நடவாமல் நடப்பவை எம் மக்களுக்கு அமைதியான சுதந்திரமான பாதுகாப்பானவாழ்வைத்தரட்டும்.

எமது அனுபவங்களில் கசிந்த கண்களையும் அவற்றில் வழியும் துன்பக் கண்ணீரையும் அன்னை என்றும் துடைப்பாளாக!

**அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

## அம்மா!கற்றுத்தா, மரியே! சொல்லித்தா!!



கரம்பொன் வேளாங்கண்ணி யாத்திரைத் தலத்தில் திருநாள் முடிந்து அருட் திரு [illegible] அடிகள் [illegible] செபம் சொல்லும் காட்சி.

## தீவுப்பகுதி பங்குத் தந்தையர்களின் ஆசியுரை

கரம்பொன் வேளாங்கண்ணி யாத்திரைத்தலம் வேகமாக வளர்ந்து வருகின்றது என்பதற்குத் தீவுப் பகுதி மக்கள் இத்தலத்தின் மீது வைத்துள்ள பக்தியும் காட்டுகின்ற கரிசனையுமே சான்றாக உள்ளது. இதன் வளர்ச்சியில் துரித முன்னேற்றம் காண அன்னையின் ஆசியையும் வாழ்த்துக்களையும் வேண்டி நிற்கின்றோம்.

- அருட்திரு சா. கிருபானந்தன்
ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை

கரம்பொன் வேளாங்கண்ணி ஆலயம் தீவுப்பகுதியிலேயே ஒரு சிறந்த யாத்திரைத் தலமாக மாறி அன்னையின் அருள் வளங்களைப் பொழிய வாழ்த்துகின்றோம்.

- அருட்திரு யேசுதாசன்
நாரந்தனை பங்குத்தந்தை

கரம்பொன் வேளாங்கண்ணி யாத்திரைத்தலம் யாழ். மறைவட்டத்தால் பொறுப்பேற்கப்பட்டு வருகிற ஆண்டுடன் 10 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றபோது அன்னைக்குரிய புதிய ஆலயத்தை அமைத்து யாத்திரைத் தல வசதிகளைப் பெருக்க அன்னை அருள்பாலிக்க வேண்டும். 10 ஆண்டு நிறைவுத் திருநாள் திருப்பலி புதிய ஆலயத்தில் நடைபெற விரும்பி அன்னையின் ஆசிர்களைத் தெரிவித்து நிற்கிறோம்.

- அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை
கரம்பொன் பங்குத்தந்தை

அம்மா! கற்றுத்தா! மரியே! சொல்லித்தா!
இயேசுவிற்கு சொல்லிக் கொடுத்தது போல
எனக்கும் சொல்லித்தா!

★

அருள் நிறை மரியே!
நீர் ஓர் அர்ச்சியசிட்ட மரியே

★

தியாகத்தின் தாயே!
திடம் தருவாயே!!

★


## ★ வாழ்த்துகின்றோம் ★

★ தியாகத்தின் தாயே வரமருள்வாயே! ★
**நியூ சிற்றி றேடேர்ஸ்**
135, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

★ துன்ப வேளையில் துயர்துடைப்பாய் தாயே! ★
**லேடன் காமன்ஸ்**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ அருள்மழை பொழிவாய் ஆரோக்கியத் தாயே! ★
**ஏ. ஜே. எம். ரெக்ஸ்ரைல்ஸ்**
147, நியூ மார்க்கற் யாழ்ப்பாணம்.
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ தேவனின் தாயே, திடம் தருவாயே! ★
**நியூட்டன் றேர்ட்ஸ் சென்ரர்**
31, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ அருள் நிறை மரியே. அவலம் தீர்ப்பாயே! ★
**சிற்றி மெடிக்கல்ஸ்**
487, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
**ஸ்ரீமத் மார்க்கண்டு சுவாமிகளின் குருபூசை**

ஷ குருபூசை கைதடி ஆச்சிரமத்தில் 2-6-89 வெள்ளிக்கிழமை 10-00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அடியார்கள்.

'கைதடி' [814)

# புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி வசதிகள் இல்லாத நிலையில்

புதுக்குடியிருப்பு, மே 30

புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி மூலம் மக்கள் அடிப்படை வைத்திய வசதிகளைக்கூடப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். 1959 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அதே கட்டடத்திலேயே இன்றும் ஆஸ்பத்திரி இயங்கி வருகின்றது. இதனால் இப் பகுதி மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு கிராமோதைய சபைத் தலைவர் திரு. க அல்பிரட் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாதாரண வைத்திய வசதிகளுக்குக்கூட புதுக்குடியிருப்பு மக்கள் முல்லைத்தீவுக்கோ கிளிநொச்சிக்கோ, யாழ்ப்பாணத்துக்கோ அனுப்பப்படுகின்றனர்.

அம்புலன்ஸ் வசதிகூட இங்கே இல்லாததால் தம் சொந்தச் செலவிலேயே அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது.

புதுக்குடியிருப்பிலுள்ள ஆஸ்பத்திரி புதுக்குடியிருப்பு இரணைப்பாலை, அம்பலவன் பொக்கணை மாத்தளன் முள்ளி வாய்க்கால் ஆனந்தபுரம். உடையார் கட்டு, விஸ்வமடு, முத்தயன் கட்டு, தேவிபுரம், சுதந்திரபுரம், வள்ளிபுனம், வலையன் மடம் ஆகிய பரந்துபட்ட கிராம மக்களின் சுகாதார சேவையைக் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

எனினும் 20 கட்டில்களைக் கொண்ட ஒரு வைத்தியசாலையாகவே இன்றுவரை அது இயங்கி வருகிறது.

மக்கள் தம் அடிப்படைச் சுகாதார வசதிகளைக் கூடப் பெறமுடியாது உள்ளனர்.

இப்பகுதி மக்களின் குறைபாட்டை உணர்ந்துகொண்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் 1987 ஆம் ஆண்டு இந்த ஆஸ்பத்திரியில் ஒரு மருத்துவமனை அமைப்பதற்கென 2 1/2 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்திருந்தார்.

வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த சமயம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் இவ்வேலைகளை நிறைவேற்ற முடியாமல் போனது இப்பகுதி மக்களின் துர்பாக்கியம் என்றே சொல்லவேண்டும்.

இனிவரும் காலங்களிலாவது இப்பகுதி மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்வார்கள் என நம்புகின்றோம்.

(அ) வைத்தியசாலைக் கட்டடங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

(ஆ) மருத்துவ விடுதி கட்டப்படவேண்டும்.

(இ) அம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்கப்படவேண்டும்.

(ஈ) நோயாளர்களுக்கு வேண்டிய மருந்து வசதிகள் உடனுக்குடன் வழங்கப்பட வேண்டும்.

(உ) மருத்துவமாது சேவை ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(ஊ) எம்.பி.பி.எஸ். டாக்டாரின் சேவை கிடைக்க வசதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தலைமைப் பணி மிக உன்னதமானது

### நெடுந்தீவுப் பங்குத்தந்தை கூறுகின்றார்

குருநகர், மே. 30

தலைவன் என்பவன் நாட்டில் சிறந்த பணியாளனாகவும், கடின உழைப்பாளியாகவும் இருக்க வேண்டும். தலைமைப் பணி ஓர் உன்னத பணி என்ற உண்மையையும், உணர்வையும் பாடசாலை வாழ்நாளிலேயே கற்றுக்கொள்ள முடியும்.

நெடுந்தீவு றோ. கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவ தலைவிகளதும், வகுப்புத் தலைவிகளதும் சின்னம் சூட்டும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து சிரேஷ்ட மாணவ தலைவிக்கான சின்னத்தை அணிவித்து உரை நிகழ்த்துகையில் நெடுந்தீவு பங்குத் தந்தை வணபிதா எம். எம். வி. அமிர்தகுமார் அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், ஏனைய வகுப்பு மாணவ தலைவிகளுக்கான சின்னங்களை அணிவித்துக் கௌரவித்தனர்.

வித்தியாலய அதிபர் சங்- சகோதரி மேரிலொறன்ரீனா, உப அதிபர் திரு. எம். எஸ். ஏ. ஒஸ்வேல்ட், ஆசிரியர் திரு. ஏ. எஸ். எம். பீலிக்ஸ் ஆகியோரும் வைபவத்தில் உரையாற்றினார்கள். [க-51]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சி. சிவசம்பு**

(இளைப்பாறிய தபால் அதிபர்)

தோற்றம்: 15 - 08 1909 மறைவு: 23 - 05 - 1987

திதி: 30 05 1989

உருவாய் அன்று அருவாய் இன்று, என்றும் எமது வழிகாட்டியாய் எங்கள் உள்ளத்தில் நிலையாய் நிற்கும் பேறு பெற்றீர்கள்.

உங்கள் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அருணோதயம்,
மானிப்பாய். [11085]

## 13 ஆவது நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 18- 05- 1958

ஆண்டவன் அடியில்: 30- 05- 1976



**செல்வி ரூபராணி செல்வரத்தினம்**

[ரூபி]

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த நீங்கள் 13 ஆண்டுகள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்கள் திருஉருவமும் நினைவும் எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
**அன்புக் குடும்பத்தினர்.**

''செல்வ கிரி''
உடுப்பிட்டி. [693]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





**செ. பரமேஸ்வரி**

தோற்றம்: 27 - 03 - 1935 மறைவு: 27 - 05 - 1987

**மு. இராசதுரை**

தோற்றம்: 12 - 01 - 1907 மறைவு: 27 - 05 - 1987

திதி: 03 - 06 - 1989 சனிக்கிழமை

அன்புத் தெய்வங்களே!

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எம்மைப் பிரிந்து வருடங்கள் இரண்டு ஆகினாலும் உங்கள் நினைவு எம்மனதை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார். உறவினர்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. [illegible]

## 6 ம் மாத நினைவஞ்சலி



மலர்வு: 15-04-1964

உதிர்வு: 13-12-1988

செல்வன்
**நவரத்தினம் அருட்செல்வம்**
(அருள்)

எமது கண்ணீர் அஞ்சலி

உனது நினைவால் வாடும்
ஐயா, அம்மா, அத்தான், அக்காமார்
தங்கைமார், தம்பிமார்,
உறவினர், நண்பர்கள்.

நாவற்குழி தெற்கு.
கைதடி. (815)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் குணநாயகம் B.A [S.L.A.S]**

(உதவி அரசாங்க அதிபர், வவுனியா)

அண்டவன் படைப்பு: 24.04.1944 ஆண்டவன் அடியில்: 15.05.1985

திதி: 30 - 05 - 1989

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் திருவுருவாய், சேவையின் சிகரமாய், பழகியோர் இதயங்களில் பாச மலராக வீற்றிருக்கும் எங்கள் அன்புக் குணமே! உமது இன் சொல்லும் ஈகை உணர்வும் ஆண்டுகள் பல சென்றாலும் எங்கள் இதயத்தை விட்டு அகலாதையா! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மக்கள்,
தகப்பன், தாய், சகோதரங்கள்,
மாமன் மாமி, மருமக்கள்,
பெருமக்கள்.

சரவணை
வேலணை. (805)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பசுபதி அகஸ்தியன்**

தோற்றம்: 19-4-1939 மறைவு: 15-4-1989

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் பிரிந்த குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

கமலா சதனம்
மல்லாகம். (817)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**வசந்தகுமார் (சங்கர்)**

தாயின் மடியில்: 1968 - 10 - 25 தாயக மடியில்: 1989 - 04 - 30

நீ மக்களை நேசித்தாய்
நீ மரணத்தை மறந்தாய்
அவை இரண்டும் இப்போது தெரிந்தன
நீ மண்ணுக்காய் செய்த சேவை
சரித்திரமே உள்ள மட்டும் வாழும்
நெஞ்சம் நிறைந்த நினைவும் நிலைக்கும்.

என்றும் உன்னை நினைந்துயருகும்;
கொக்குவில் நண்பர்கள்,
பெற்றோர்.

கொக்குவில். (683)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

உற்றவன்தீர்ப்பான் மருந்து உழைச் செல்வானென்று
அப்பால் நாற் கூற்றே மருந்து.

**பொருள்:**

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்று மருத்துவமுறை அந்த நான்கு வகைப் பாகுபாடு உடையது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
30 - 05 - 1989 த: பெ: இல: 83

## மாணவர் நலன் காக்க சட்டம் இயற்றினால் என்ன?

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்வது, காவலில் வைப்பது ஆகிய நடவடிக்கைகளில், அரசு வகுத்துள்ள சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் பாதுகாப்புப் படையினர் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதும், பெற்றோருக்கோ அல்லது பாடசாலை, பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கோ அறிவிக்கப்படாமல் காவலில் வைக்கப்படுவதும், விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்யப்படுவதும், நாட்டின் எட்டுத் திக்குகளிலும் நடக்கும் வழமைச் சம்பவங்களாகி விட்டன. கைது செய்யப்படும், மாணவர்கள் அல்லது கூட்டிச் செல்லப்படும் மாணவர்கள் காணாமற் போவோர் பட்டியலில் சேர்க்கப்படுவதும் உண்டு. ஒரு சில மாணவரின் கருகிய சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன!

தீவிரவாதத்தை அடக்குவது அல்லது பயங்கரவாதத்தை ஒழிப்பது அல்லது ஆயுதங்களைக் களைவது என்ற முத்திரையுடன் காக்கிச் சீருடைக்குள் புகுந்தவர்கள் தங்களைத் தட்டிக்கேட்க எவரும் இல்லை என்ற எண்ணத்துடன் நடந்து கொள்வது மறைக்க முடியாத ஓர் உண்மையாகி விட்டது.

இந்த அட்டூழியங்களை ஆட்சேபித்து தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்கள் நடத்தியதும், பல்கலைக்கழகங்கள் மாதக் கணக்காக மூடப்பட்டுக் கிடந்ததும் எல்லோரும் அறிந்த விடயங்கள்.

மாணவர்களுக்கு படையினர் வழியால் இழைக்கப்படும் அநீதிகளை உணர்ந்த நிலையில், அவர்களது கல்வி தொடரப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், மிகச் சிரமப்பட்டு, பலநாள் முயற்சி எடுத்து உயர் கல்வி அமைச்சர் பல்கலைக்கழகங்கள் மீண்டும் இயங்க வழி செய்தார். மாணவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் சில வாக்குறுதிகளையும், வழிமுறைகளையும் தெரிவித்திருந்தார். மாணவர்களுடன் சமரசம் கண்டார்.

ஆனால் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத வகையில், வழிமுறைகளை மீறி மாணவர்கள் தொடர்ந்தும் இன்னற்படுத்தப்படுகிறார்கள் என்ற முறைப்பாடு வந்திருக்கிறது.

மாணவர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்வது குறித்து, குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றோருக்கு, பாடசாலை அல்லது பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்க வேண்டும். விசாரணை பற்றிய நிலை பல்கலைக்கழக உபவேந்தர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் இவை போன்ற நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகளைப் படையினர் பின்பற்றவில்லை என்பதைப் பல சம்பவங்கள் நிரூபித்திருக்கின்றன.

அதனால் தான், மாணவர் கைது, காவல் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகளை, அரச உத்தரவுகளைக் கடைப்பிடிக்காத படையினரை இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த அரசு முடிவு செய்திருக்க வேண்டும். இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக இருந்து விடக் கூடாது. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் நடிப்பாகி விடக் கூடாது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற படுபாதகச் சட்டத்தை இயற்றியது அரசு தான். அதன் மூலம் ஆயுதப்படையினருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து, சிறிதேனும் மனிதாபிமானம் இல்லாமல், மனச்சாட்சி கூட இல்லாமல் நடக்கக் கூடிய துணிவை அவர்களுக்குத் தலைக்கேற வைத்ததும் அரசு தான். எனவே தனது தவறை அது இப்போது புரிந்து கொண்டு விட்டதா, உணர்ந்து கொண்டு திருந்தி நடக்கப் போகிறதா என்பது பென்னம் பெரிய கேள்விக் குறி!

மாணவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தவிர்க்கப்பட வேண்டும், அப்பாவி மாணவர்கள் அனுபவிக்கும் அல்லல்கள், அவர்களுக்குச் செய்யப்படும் அக்கிரமங்கள் நீக்கப்பட வேண்டும். அதில் அரசுக்கு உண்மையாகவே அக்கறை இருந்தால் மாணவர் கைது, காவல், விசாரணை என்பன சம்பந்தமாக இப்போது வகுத்த வழிமுறைகளையும், மேலும் இறுக்கமான விதிமுறைகளையும் சேர்த்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றலாமே! அதில் காணப்படும் விதிகளைக் கடைப்பிடிக்காத அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டிக்கும் சரத்துக்களையும் அதில் சேர்க்கலாம்.

அந்தச் சட்டத்தைக் கண்டிப்பாக அமுல் செய்து மாணவர் கல்விக்கும், உயிருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

படையினருக்கு தண்டனைத் தவிர்ப்பு வழங்கச் சட்டம் கொண்டு வர முடியுமானால், எதிர்காலப் பிரசைகளான மாணவர் நலன் காப்பதற்கு ஏன் சட்டம் கொண்டு வர முடியாது? அதனை ஏன் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த முடியாது?

# சீனதேசியகாங்கிரஸ்ஜூன்20இல்கூடி ஜனநாயக உரிமை பற்றி தீர்மானம்

## அதுவரை போராட்டத்தைத் தொடர மாணவர்களுக்கு வேண்டுகோள்

பீகிங், மே 29

ஜனநாயக சுதந்திரம் கோரும் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நடத்தும்படி ஜனநாயக இயக்கவாதிகள் சிலர் சீனமாணவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக நடந்துவரும் தியனமன் சதுக்க முற்றுகையை வருகிற ஜூன் மாதம் 20ஆம் திகதி வரை நீடிக்கும்படியும் அவர்கள் தங்கள் வேண்டுகோளில் மாணவரை வலியுறுத்தி உள்ளனர்.

ஜனநாயக சுதந்திரக் கோரிக்கைபற்றி விவாதிக்க சீனமக்கள்காங்கிரஸின்விசேட கூட்டம் ஜூன் 20ஆம் திகதி கூடுகிறது.

இதனிடையில் மாணவர்கள் தங்கள் இயக்கம்பற்றி நாடு முழுவதும் பிரசார இயக்கங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்,

அதற்காக பீகிங் நகரில் முற்றுகையிட்டுள்ள மாணவர் தலைவர்களில் பெரும்பாலோர் சொந்த ஊருக்குத் திரும்புகின்றனர்.

தியனமன் சதுக்க முற்றுகையை செவ்வாய்க்கிழமையுடன் கைவிடப்போவதாக மாணவர்கள் முன்னர் அறிவித்திருந்தனர். (எ)

### பெனஸிர் பேட்டி

நியுயோர்க், மே 29

ஆப்கனிஸ்தான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ தெரிவித்தார்.

கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர் எனற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார். (எ)

### எவரஸ்டில் மனிதன்

காத்மண்டு, மே 29

கடந்த புதன் கிழமை மலையேறும் கோஷ்டி ஒன்று 8,848 மீற்றர் உயர எவரஸ்ட் சிகரத்தை அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இக்கோஷ்டியில் அட்ரியன் பேர்கஸ் என்ற பிரிட்டிஷ் பிரசையும் ரொடரிக் மக்கென்ஸி என்ற ஆஸ்திரேலியரும் இருந்தனர்.

இவர்களுக்கு உதவியாக நேபாள வழிகாட்டிகளான சக்பா நூறு, சுனம்டென்டு ஆகியோர் சென்றிருந்தனர்.

## எப் - 16 ரக அமெரிக்க போர் விமானத்தை ஓட்ட பிரதமர் ராஜீவ் அவா

புதுடில்லி, மே 29

பிரதமர் ராஜீவ் காந்தி தனது பாட்டனாரின் நினைவு தினத்தில் ஆசை ஒன்றை வெளியிட்டார்.

அமெரிக்கா தயாரித்த எப்-16 ரக விமானத்தைத் தான் ஓட்டிப் பார்க்க வேண்டும் என்பதே ராஜீவின் ஆசை.

''இந்திய விமானப்படையின் சண்டை விமானத்தை ஓட்டிப்பார்க்க முயற்சித்தேன். அது வெற்றியளிக்கவில்லை. ஆனால் எப்-16 ரக சண்டை விமானத்தை ஓட்ட முடியும் என்று நம்புகிறேன். அதற்காக நான் அடுத்தமுறை எங்கே போகவேண்டுதல் என்பது எனக்குத் தெரியும்''

இப்படி பிரதமர் ராஜீவ் சொன்னார்.

பம்பாயில் நவசேவா துறைமுகத்தை நாட்டுக்கு அர்ப்பணித்துப் பேசும் நிகழ்ச்சியில்கலந்துகொண்டு பேசினார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எப்-16 ரக சண்டை விமானங்களை வழங்கத் தீர்மானித்துள்ளது தெரிந்ததே! (எ)

## கடலில் விழுந்த ஹைட்ரஜன் குண்டிலிருந்து கதிரியக்க கசிவு

டோக்கியோ, மே, 29

ஜப்பானிய தென் பகுதியிலுள்ள ஒகினவா தீவுக்கு அருகில் 1965 ஆம் ஆண்டு கடலில் விழுந்த ஹைட்ரஜன், குண்டில் கதிரியக்கக் கசிவு ஏற்பட்டுள்ளது.

எனினும் அந்தக் குண்டு இப்போதோ அல்லது எதிர் காலத்திலோ வெடித்துவிடும் அபாயம் இல்லை என்று ஜப்பான் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசின் அறிக்கை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கடலில் சுமார் 5,000 மீற்றர் ஆழத்தில் உள்ள இந்த குண்டின் மேல்பரப்பு பாதிப்புக்கு உள்ளாகியிருக்கக்கூடும் என்று அந்த அறிவிப்புக் கூறுகிறது.

விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றிலிருந்த விமானத்தில் இந்த குண்டு வைக்கப்பட்டிருந்தது. அந்த விமானம் கடலில் விழுந்து மூழ்கியது.

அந்தக் குண்டிலிருந்து வெளிப்பட்ட கதிரியக்கக் கசிவு கடலின் கீழே தரை மட்டத்தில் ஒன்று சேர்ந்திருக்கும் என்றும், இதனால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்புகள் எதுவும் ஏற்படாது எனவும் அமெரிக்க அறிக்கை கூறுவதாக ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க அறிக்கையை ஜப்பான் நம்புகிறது என்றாலும், கதிரியக்கக் கசிவால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித் தனிப்பட்ட முறையில் ஓர் ஆய்வு நடத்தப்படும் என்று வெளியுறவு அமைச்சர் சுசுகே யுனோ கூறினார்.

## அக்யூனோவின் தடைக்குஎதிராக மார்க்கோஸ் நீதிமன்றில் மனு!

மணிலா, மே 29

முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட்மார்கோஸைமணிலா திரும்புவதற்கு பிலிப்பீன்ஸ் அதிபர் அக்யூனோ விதித்த தடையை ஆட்சேபித்து சுப்பிரீன்ட் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இரண்டு பிரதம உதவியாளர்களுக்கு உயர்நீதி மன்றம் விதித்த உத்தரவில் ''மார்க்கோஸை தாயகம் திரும்ப அனுமதி மறுப்பதற்கான காரணத்தை 10 தினங்களுக்குள் தெரிவிக்கவும்'' என்று கூறப்பட்டுள்ளது.

திரு. மார்கோஸின் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தன்னை தாயகம் திரும்ப விதிக்கப்பட்டுள்ள தடையைரத்துச் செய்யும்படி கோரப்பட்டுள்ளது.

மார்கோஸ் ஹவாய் மருத்துவமனை ஒன்றில் உயிர்காக்கும் சாதனங்களில் தங்கி இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது (எ)

### கோர்பச்சேவ் நூலுக்குத் தடை!

பக்தாத் மே 29

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் எழுதிய ''பெறஸ்ரொயிக்கா'' நூலுக்கு தென்ஜேமன் அரசு தடை விதித்துள்ளது.

அரேபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட இந்த நூலின் பிரதிகளை பறிமுதல் செய்யும்படி தென்யேமன் பாதுகாப்புப்படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

### லண்டனில் இந்து மாநாடு

புதுடில்லி, மே 29

உலக இந்து மாநாடு இந்த ஆண்டு லண்டனில் நடத்தப்பட உள்ளது.

வருகிற ஆகஸ்ட் 26 ஆம் திகதி மாநாடு துவங்கும். இரண்டு தினங்கள் நடக்கவிருக்கும் மாநாட்டில் ஒரு லட்சத்துக்கு அதிகமான இந்துக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விஸ்வ இந்து பரிஷத் மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. (எ)

### 'போடோ' இணைப்புமொழி

கௌஹாத்தி மே 29

'போடோ' மொழியை இணைப்பு உத்தியோக மொழியாக அஸாம் மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

# இக்கட்டான காலங்களிலும் மாணவிகளின் கல்விக்காகச் சேவையாற்றினார்

## இளைப்பாறிய வேம்படி அதிபருக்குப் புகழாரம்

யாழ்ப்பாணம்,மே30

பெரும் இக்கட்டான காலத்தில் தன் உயிரைப் பணயம் வைத்து மாணவிகளின் கல்வியையே முக்கியம் எனக் கருதிச் சேவையாற்றியவர் திருமதி ஏ. இராஜரத்தினம்.

இப்படிக் கூறினார் கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். சிவவிநாயகமூர்த்தி.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபராக எட்டு வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெறும் திருமதி ஏ. இராஜரத்தினத்துக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் அவர் பேசினார்,

கல்லூரி அதிபர் செல்வி ஆர். இராஜரத்தினம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் தன் உடைமைகள் அழிக்கப்பட்டபோதும் இவர் கல்லூரியில் இருந்து கல்லூரியைக் காப்பாற்றப் பாடுபட்டார்.

இக்கல்லூரியுடன் இவர் இரண்டறக் கலந்து பணியாற்றினார் என்றார்.

கல்லூரி அதிபர் செல்வி ஆர். இராஜரத்தினம் பேசுகையில் மிகவும்நெருக்கடியான காலகட்டத்தில் பணியாற்றிய போதும் பரீட்சை முடிவுகள் சிறந்ததாக வரப் பாடுபட்டார்.

கல்லூரிக்குத் தளபாடங்கள், உபகரணங்கள். கட்டடம் ஆகியவற்றைப் பெற்று கல்லூரி வளர்ச்சிக்கு உதவினார் என்றார்.

துணைஅதிபர் திருமதி எஸ். பொன்னம்பலம் பேசுகையில் 'நிர்வாகத்தில் அதிபர் என்று அதிகாரம் செலுத்தாமல் அதிகாரங்களை ஆசிரியர்களுக்கும் பகிர்ந்து அளித்து, பாரம்பரியம் காத்தார்.

கடவுள்மீது பக்தி வைத்துச் சமய சூழ்நிலையைக் கல்லூரியில் உருவாக்கினார்.

இன்னல் வரும்போது கோளறு பதிகத்தை மனனம் செய்யும்படி மாணவர்களுக்குப் புத்திமதி கூறுவார்.

தானும் அதன்படி கோளறு பதிகத்தை மனனம் செய்வார்.

இப்படி அவர் கூறினார்.

இளைப்பாறும் அதிபர் பதிலுரை நிகழ்த்தினார்.

மாணவிகள் சார்பில் செல்வி வனஜாராணி கண்ணுத்துரையும் பேசினார். இறுதியில் இளைப்பாறும் அதிபருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. [க-3]

## சனசமூகத் தொடர்புடையோர் சிறந்த பிரஜைகளாகத் திகழ்வர்

### சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உரை

அரியாலை, மே 30

''கல்விமான்களே சமூகத்தில் முதன்மையான மனிதர் என்று கணிக்கப்படுபவர்கள்; இவர்களே சிறந்த சமூக சேவையாளர்களாகத் தொண்டாற்றி வருகின்றனர், இவ்வாறான பண்பு சனசமூக நிலையங்களுடன் தொடர்பு உள்ளவர்களுக்கே இலேசாக வளர்ந்து வருகிறது. ஆகவே சனசமூக நிலையங்களுடன் தொடர்புடையவர்களே சமூகத்தில் சிறந்த பிரஜைகளாகக் கணிக்கப்படுகின்றனர்''

சண்டிலிப்பாய் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான சனசமூக நிலையங்களின் சமாஜக் கூட்டத்தில் உரையாற்றும்போது உள்ளூர் ஆட்சி திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சி. ரகுலேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் திரு. செகராஜசிங்கம் தலைமை வகித்தார்.

திரு. ரகுலேந்திரன் தமது உரையில் மேலும் கூறியதாவது ''எமது பிரதேசத்தில் உள்ள ஒவ்வொருவரும் சனசமூக நிலையங்களுடன் இணைந்து செயலாற்றினால் தான் எமது சமூகம் முன்னேறும்.

சனசமூக நிலையங்கள் ஒவ்வொரு கிராமத்தின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் நிலையங்களாக இருக்க வேண்டும். எமது மொழி, கலை, கலாசாரங்களை வளர்ப்பதற்குச் சனசமூக நிலையங்களே சாதனங்களாகும்.''

இப்படி அவர் கூறினார். (ச)

### கரடிப்போக்கில் உணவு உதவி

கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இளம் விதவைகளுக்கு கிளிநொச்சி சர்வோதய மாவட்ட நிலையம் உலர் உணவுப் பொதிகளை வழங்க உள்ளது.

ஜூன் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் கரடிப்போக்கில் உள்ள சர்வோதய அலுவலகத்தில் இந்த உணவுப்பொதிகளை பெறலாம் என அறியவருகின்றது.

இந்த உதவியைப்பெற வருபவர்கள் கணவரின் மரண அத்தாட்சிப்பத்திரம் குடும்ப பத்தவரின் உணவு முத்திரை ஆகியவற்றுடன் வரவேண்டும் என்று கிளிநொச்சி சர்வோதய பொறுப்பாளர் திரு. எஸ். மனோகரன் தெரிவித்தார். (க-76)

### சென். பெனடிக்ற் தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், மே 30

அண்மையில் நல்லூர் சென் பெனடிக்ற் வித்தியாசாலையில் தமிழ்த் தின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பாடசாலை அதிபர் அருட் செல்வி லீசா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் வாசிப்புப் போட்டி, பேச்சுப் போட்டி, உறுப் பெழுத்துப் போட்டி என்பன இடம்பெற்றன. (க-13)

### ஓடிய இளைஞன் கைது!

பச்சிலைப்பள்ளி, மே 30

கள் இறக்கிக் கொண்டு வந்த இளைஞர் படையினரைக் கண்டு ஓடியதால் கைதுசெய்யப்பட்டார்.

இச் சம்பவம் முகமாலை இடம்பிட்டி என்னும் இடத்தில் இடம்பெற்றது.

முகமாலையைச் சேர்ந்த ம. சத்தியசீலன் (வயது 17) என்னும் இளைஞரே கைது செய்யப்பட்டவராவார் (இ-117)

### நவாலி மாரியம்மன்

யாழ்ப்பாணம் மே 30

நவாலி தம்பன் மாரியம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் 3 ஆம திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இக் கோயிலில் இரண்டரை லட்சம் ரூபா செலவில மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், மணிக்கோபுரம் ஆகியவை அமைப்பதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன. (ச)

### அதிபராக நியமனம்

சாவகச்சேரி, மே 30

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு. இ. கணேசன் மீசாலை விக்னேஸ்வரமகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எஸ். நாகராசா சரஸ்வதி வித்தியாலயக்திற்குபதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-31)

### தண்ணீர்ப் பிரச்சினை

கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சிஅரசினர் மருத்துவ மனையில் தண்ணீர் இல்லமையால் நோயாளர்கள் பெரிதும் அவதியுறுகின்றார்கள்.

இது வரை தண்ணீர் தாங்கி மூலம் நீர் கொண்டு வரப்பட்டு பாவிக்கப்பட்டது.

தற்போது அந்த தண்ணீர் தாங்கி சேதம் அடைந்துள்ளதால் தண்ணீர் பிரச்சினை அதிகரித்துள்ளது. (க-76)

## அலரி விதையை உண்ட மாணவிகள் ஆஸ்பத்திரியில்

வட்டக்கச்சி, மே 30

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இரு மாணவிகள் அலரி விதையைத் தண்ணீருடன் உட்கொண்டதால் மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

ச. சத்தியவாணி (12 வயது) எஸ். சோபனா (6 வயது) ஆகிய மாணவர்களே மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டவர்களாவர்

இவர்கள் இருவரும் ஆபத்தான நிலையைத் தாண்டிவிட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ச-163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோண்சன் Johnson
[10 H.P.]
வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப் பாகங்களையும் மலிவு விலையில் வட்டகுதியில் கொள்வனவு செய்ய நம்பிக்கையான ஒரே இடம் :
சென்ட் அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

உதயன்

30 - 05 - 1989 செவ்வாய்க்கிழமை

கடற்றொழிலாளர்களே!
3/4 மில்லி மீற்றர் ரேலர் மால், முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரேலர் மடி நூல் வகைகள்- போயா, வலை நூல் வகைகள்- கடற்றொழில் உபகரணங்கள் எதுவாகினும் தெரிவு செய்ய நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்;
சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர் - யாழ்ப்பாணம்

# ஆசிரியர் பதவி விண்ணப்பம் ஜூன் இறுதியில் கோரப்படும்

கொழும்பு, மே 30

25 ஆயிரம் ஆசிரியர்களைத் திரட்டுவதற்காக விண்ணப்பங்கள் அடுத்தமாதக் (ஜூன் மாத) கடைசியில் கோரப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இப்போது பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாடு பற்றிய புள்ளிவிவரங்கள் அதிபர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. இவ்விவரங்கள் வருகிற மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கிடைத்துவிடும்.

ஆசிரியர் பற்றுக்குறையாக உள்ள பாடசாலையின் விவரங்கள் எந்தப் பாடங்களைப் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர் சேவை என்ற விவரம் ஆகியவற்றின் விண்ணப்பங்களைக் கோரும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை காலியிடங்கள் உள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி அரச அதிபர்களிடம் கையளிக்க வேண்டும்,

விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கும் குழுவின் செயலாளர்களாக உதவி அரச அதிபர்களே இருப்பர்.

நேர்முகப் பரீட்சைக்கு கல்விச் சேவைக் குழு நியமிக்கும் ஒருவரே தலைமைவகிப்பார்.

காலியிடங்கள் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் நேர்முகப்பரீட்சையின் போது அவதானிகளாக இருப்பர். அந்தப் பகுதியின் முக்கிய பிரசைகளும் அவதானிகளாகப் பணிபுரிய அழைக்கப்படுவர்.

4 ஆண்டுகள் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தோருக்கு நியமனம் வழங்கப்படுவதில் முதலிடம் அளிக்கப்படும்.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோரே விண்ணப்பிக்க முடியும்.

அதற்குக் குறைந்த தகைமயுள்ளவர்களின் விண்ணப்பங்கள் தோட்டப் பாடசாலைகள், கஷ்டப் பிரதேச பாடசாலைகள் ஆகிய பாடசாலைகளில் நியமனம் வழங்கும் போது கவனிக்கப்படும். ஆனால் அப் பாடசாலைகளில் நியமனம் கோருபவர்களில் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் குறைவாக இருந்தாலே இவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அப்படி நியமனம் பெறும் தகைமை குறைந்தவர்களின் பதவிகள் ஜி சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்திய பின்னரே உறுதிப்படுத்தப்படும். (ஒ-எ)

# உடற் பயிற்சி ஆசிரியர் நேர்முகப் பரீட்சை நாளை

உடற்பயிற்சி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை கொழும்பில் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு பிறப்புச் சான்றிதழ், வாக்காளர் பதிவுப் பத்திரம், கல்விச் சான்றிதழ், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் விளையாட்டுச் சான்றிதழ்கள் என்பனவற்றுடன் வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது: (ஒ-13)

## செய்திச் சாரம்

### கந்தளாயில் கொள்ளை முறியடிப்பு

கொழும்பு, மே 30

கந்தளாயில் வங்கி ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்ட 5 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட எடுக்கப்பட்ட முயற்சியை பாதுகாப்புப் படையினர் முறியடித்ததாக கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று நடந்த இச்சம்பவத்தின்போது பாதுகாப் படையினர் ஒருவரைக் கைது செய்ததாகவும் அந்நபரிடம் இருந்து கொள்ளையிடப்பட்ட பணம் மற்றும் காசோலைகள் அனைத்தும் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

வடமராட்சி, மே 30

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாகர்கோவில் வடக்குப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் செல்லையா குலதிலகபிள்ளை (வயது 52) எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-160)

### சூடுபட்டு காயம்

யாழ்ப்பாணம், மே 30

நேற்று ஆனைக்கோட்டைப் பகுதியில் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

சத்தியானந்தம் என்ற பிரஸ்தாப நபர் ஒரு மன நோயாளி எனத் தெரிவிக்கப்பட்டது.

### இன்று விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 30

பூநகரி, தம்பிராய் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமாகும். (ஒ)

### பொருள்கள் எரிப்பு

முல்லைத்தீவில் இருந்து முள்ளியவளைக்கு தனியார் வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்ட பொருள்கள் நெடுங்கேணிச் சந்தியில் வைத்து இறக்கப்பட்டு, எரிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

முகாம் ஒன்றுக்கே இப்பொருள்கள் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஒ-94)

### தமிழ் மக்களின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கிறீர்கள். பெரும் சிரமம், இடையூறுகள், குடும்பக்கஷ்டம் ஆகியவற்றின் மத்தியில் இப்பணியை ஏற்றிருக்கும் நீங்கள் வரலாற்றில் இடம்பெறும் முன்னோடிகள்.

பாதுகாப்புக்குச் சகல ஒத்துழைப்பை வழங்குவதுடன் அழிந்துபோன பிரதேசத்தை புனரமைக்க, புனர்நிர்மாணம் செய்ய உங்கள் பங்கை வழங்குங்கள்.

சிலர் உங்களைத் தூற்றினாலும் வரலாறு உங்களை மதிக்கும்.

இப்படி அவர் கூறினார்.

வைபவத்தில் வடக்கு கிழக்கு மாகாணசபை அமைச்சர்கள் திரு சி. எம். கணேசலிங்கம், ஜனுப்அபுயூசுப் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-150)

### கரணவாய்---

தம் தெரிவித்து அனைவரையும் விடுவித்தார்.

இதேவேளை கரணவாய் சுற்றிவளைப்பில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் 10 மணியளவில் முகம்மூடி முன் நிறுத்தப்பட்டனர் சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்

நவிண்டில், கரவெட்டிப் பகுதிகளில் அமைதிப் படையினர் தீவிர ரோந்தை மேற்கொண்டனர். (ஒ-70-160)

### இன்று ஹர்த்தால்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்ட ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எப்) விடுத்துள்ளது.

திரு. சிவபாலராஜா கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியாவில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார் என்பது தெரிந்ததே.

# ஐக்கிய சோஷலிஸ அணியின் தேசிய பட்டியல் எம். பி. யார்?

## நாளை தெரிய வரலாம்

கொழும்பு, மே 31

தேசியப் பட்டியல் மூலம் கிடைத்துள்ள எம். பி. பதவிக்கு யாரை நியமிப்பது என்பதை ஐக்கிய சோஷலிச அணியின் செயற்குழு நாளை புதன்கிழமை கூடி முடிவு செய்ய உள்ளது.

இக் கூட்டம் நேற்று நடைபெறுவதாக இருந்தது எனினும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் மருதானையில் வைத்துக் கொல்லப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகர் திரு. பி. டி. விமலசேனவின் ஈமக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

அதன் காரணமாக கூட்டம் நேற்று நடைபெறவில்லை.

நாளை நடைபெறும் கூட்டத்தில் எம்.பி. பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிசீலனை செய்யப்படவிருப்பதாகத் தெரிகிறது.

அவர்கள் விவரம் வருமாறு;

1. ஒஸி அபயகுணசேகரா (இலங்கை மக்கள் கட்சி)
2. பெர்னுட் சொய்சா (ல. ச. ச. க)
3. பீட்டர்கெனமன் (கம்யூனிஸ்ட் கட்சி)

(ஒ-எ)

# பிக்குவும் சிப்பாய்களும் நடத்திய நாடகம் அம்பலம்

கொழும்பு, மே 30

கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் சில வன்செயல்கள் தொடர்பாக ஒரு பிக்குவும் ஐந்து இலங்கை இராணுவச் சிப்பாய்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பிக்கு ஹோமகமவைச் சேர்ந்தவர்.

இக்கோஷ்டியின் சட்டவிரோதச் செயல்கள் விபத்து ஒன்றைத் தொடர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட தவறான தஸ்தாவேஜுகள் மூலமே அம்பலமாகின என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி வெளிவந்த தகவல்கள் வருமாறு;

சம்பந்தப்பட்ட பிக்கு, இராணுவ உயர் அதிகாரி ஒருவரை அணுகி தனது பாதுகாப்புக்கு ஐந்து இராணுவ சிப்பாய்களைத் தந்துதவும்படி கேட்டுக்கொண்டாராம்

அதற்கு அந்த அதிகாரி 'ஓர் அமைச்சர் ஒருவரின் சிபார்சு இருந்தால்தான் பாதுகாப்பு வழங்க முடியும்' என்று பிக்குவுக்குக் கூறினாராம்.

அதன்பின்னர் பிக்கு தொலைபேசி மூலம் மிகப்பெரிய அரசியல்வாதியின் செயலாளர் பேசுவது போன்று ஆள் மாறாட்டம் செய்து இராணுவ அதிகாரியுடன் பேசினாராம். அதைத் தொடர்ந்து பிக்குவுக்கு இராணுவ சிப்பாய்கள் ஐந்து பேரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து அந்த பிக்கு, ஐந்து சிப்பாய்களின் உதவியுடன் பல கொள்ளைகளையும் வன்செயல்களையும் நடத்தினர் என்பது விசாரணையில் தெரிய வந்தது. (ஒ-எ)

### யாழ். ஆஸ்பத்திரி-:--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாகவே இருப்பதாகவும், அதனை மாற்றமுடியாதுள்ளதாகவும் கூறி, பிரஸ்தாப பெண்மணியிடம் பண உதவி கேட்டார்.

அவரது பேச்சை நம்பிய பெண்மணி தம்மிடம் இருந்த 100 ரூபாவை எடுத்துக்கொடுத்தார். பணத்தை வாங்கிய நபர் அதே இடத்தில் பெண்மணியை நிற்கும்படியும் ஆயிரம் ரூபாவை மாற்றி உடனடியாக நூறு ரூபாவைத் தருவதாகவும் கூறிச் சென்றார்.

நெடு நேரமாகியும் வராததால் ஏமாற்றமடைந்த பெண்மணி காரைநகர் செல்ல பணமில்லாத நிலையில் அழுதபடி நிற்பதைக் காண முடிந்தது! (ஒ-9)

### இணுவிலில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யானர். இருவர் காயமடைந்தனர்.

இறந்தவர் செல்வி சுமித்திரா கணேசன் (வயது 7) என்பவராவர். ஜெகதீஸ்வரி, (வயது 17), சந்திரமதி ஆகியோர் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயமே விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது.

படுகாயமடைந்த சுமித்ரா யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார்,

மோதிய மினிவான் ஓடி மறைந்து விட்டதாம். (ஒ-9)

### மதுறு ஓயாத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது — என்றும் அவர் தெரிவித்தார்.

தமது நாடு இலங்கைக்கு கூடுதலான உதவி அளிக்கும் நாடுகளில் ஒன்று எனவும். இலங்கையில் புனர் நிர்மாண, புனருத்தாரண வேலைகளுக்கு ஒரு கோடி கனேடிய டாலர்களை வழங்க கனடா உறுதி அளித்திருக்கிறது எனவும் தூதுவர் தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தானிகராலயத்துக்கு ஊடாகவும் கனடா உதவி வருகின்றது. ஐ. நா, ஸ்தானிகராலயத்திற்கு ஐக்கிய ராஜ்யம், சுவீடன், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளுடன் கனடாவும் உதவிபுரிகின்றது.

கனேடிய உதவி இன்னொரு வகையில் கிராமிய அபிவிருத்தி, சுகாதாரக் கவனிப்பு முதலிய சிறிய வேலைத் திட்டங்களுக்குவழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 2 இலட்சம் கனேடிய டாலர்கள் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது—

கனடா ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீலங்காவுக்கு மொத்தமா இரண்டரைக்கோடி கனடிய டாலர் உதவி வழங்குகிறது— என்றும் கரோலின் மஸ்கி விவரித்தார். (அ-க-3)

### அமைச்சர்---

ரஞ்சன் விஜேரத்தின, கொழும்புச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையில், இந்திய அமைதிப்படைக்கு உதவியாக இலங்கைப் படையினரையும் கடமையில் ஈடுபடுத்த எண்ணியிருப்பதாகத் தெரிவித்தார்.

இது குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. மெஹ்ரோத்ராவுடன் பேச விருப்பதாகவும் அமைச்சர் விஜேரத்தின தெரிவித்தார்.

இச் சந்திப்பு நேற்று (திங்கள்) இடம்பெறுவதாக இருந்தது: (ஒ-எ)

அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்பச் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பத்திரிகைகளில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண்கள், பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இன்று (செவ்வாய்க்கிழமை)காலை விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
நியு உதயன் பப்ளிசேஷன்ஸ் [பிரைவேட்]லிமிட்டெட்,
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

ஜோசப் மோட்டார் வேக்ஸ்
யமஹா ஏஜன்சி 94, பிரதான வீதி.

பருத்தித்துறையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் அல்வாய் மேற்கு சக்கோட்டையில் எமது இல்லத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம், சிறந்த முறையில் அவுட்போட் இயந்திரங்கள் திருத்துதல் கிரூங் பிட்டிங் செய்தல் மற்றும் யமஹா உதிரிப் பாகங்கள் விற்பனை சகலவிதமான கடைச்சல்வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

ஜோசப் மோட்டார் வேக்ஸ்
அல்வாய் மேற்கு,
சக்கோட்டை.

(சி/2635)

# மரண அறிவித்தல்கள்

## திரு. முருகேசு குற்றாலலிங்கம்

[தபால் அதிபர் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்]

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முருகேசு குற்றாலலிங்கம் (28-05-1989) ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலம் சென்ற க. முருகேசு, மு. மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும், இராஜமலரின் அன்புக் கணவரும், ஜெயப்பிரிதா (சுண்டுக்குழிமகளிர்கல்லூரி), காலஞ்சென்ற சிந்துஜா, நிரோஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செ. சதாசிவம் (அரசினர் ஒப்பந்தக்காரர், அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்), ச. சரஸ்வதி தம்பதிகளின் அருமை மருமகனும், ம. காந்தமலர், நா. விஜயலக்சுமி, மு. பத்மநாதன் (சவூதி), உ. மங்கையற்கரசி, சி. கிருபைமலர், ரவிச்சந்திரன், பாலச்சந்திரன், நிர்மலா, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும்; மகாதேவா, நாகரத்தினம், உதயகுமார், சிறீதரன் (ஹைற்றோ பம்ஸ், HYDRO PUMPS) சற்குணராஜன் (ஜேர்மனி), மகேந்திரராஜன், திருச்செல்வராஜன் (உரிமையாளர் சதாஸ் மோட்டோர்ஸ்- யாழ்ப்பாணம்), இராஜவதனி, இராஜமணி, இராஜலோசினி, ஆகியோரின் மைத்துனரும்; நளாஜினி, கல்யாணி, கவிதா, பிரசாந்தன், விஜிதா, மனோரூபன், யசிதரன், சிவகரன், சுஜிதா, சஞ்சீவன், நிஸாந்தினி, தனஞ்சயன் ஆகியோரின் அருமை மாமனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (30 - 05 - 1989) செவ்வாய்க்கிழமை, மாலை 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ச, திருச்செல்வராஜன்.

'ரூஜபவனம்',
206, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(11099)

## திருமதி இராசம்மா நடராசா

வேம்படி, காரைநகரைச் சேர்ந்த திருமதி இராசம்மா நடராசா காலமானார்.

அன்னார் டாக்டர் சண்முகம் நடராஜாவின் [முருகண்டியான் வைத்தியசாலை, காரைநகர்] அன்பு மனைவியாரும், கணநாதா (சாம்பியா), கணேஸ்வரி, சண்முகநாதா (Cine-Video, Globe link Communications) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலாம்பிகை, அருணந்தி சிவம் (புகையிரத நிலைய அதிபர், மன்னார்), சிவநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசங்கர், சிவகுமார், சிவரூபி, சிவபாலன், கஜந்தி, காயத்திரி ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30-5-89) பிற்பகல் 1 மணிக்கு சாம்பலோடை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
அ. யோகேந்திரா

வேம்படி,
காரைநகர்.

(827)

## திரு. நிக்கிளஸ் யூலியஸ் பிரட்றிக்

நிக்கிளஸ் யூலியஸ் பிரட்றிக் காலமானார். இவர் யூடித் இராஜரெட்ணம், திருமதி X. பிச்சைத்தம்பி, திரு. F. X. நிக்கிளஸ், N. ஜெரோம், திருமதி கொறட்டி திச வீரசிங்கி, ஹியூபேட் எட்மன், டெனிஸ் நிக்கிளஸ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 29 - 5 - 89 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
J. A. இராஜரட்ணம்.

386, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.

(828)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 30—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org